உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 2 August 1940. No. 9

விஷய சூசிகை.

| | பக்கம் |
|---|---|
| ரஸாயனம் அல்லது காயகல்பம் (பத்திராதிபர்) | 1—11 |
| ராஜயக்ஷ்மாவும் இறந்த சர்ப்ப சரீரங்களுடைய உபயோகமும் | 11—15 |
| திருச்சி ஆயுர்வேதசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள் | |
| வைத்தியக் குறிப்புகள் | 15 |
| மதிப்புரை | 15 |
| ஆங்கிலவைத்தியமும் ஆயுர்வேதமும் பத்திராதிபர் | 16—25 |
| குறைந்த இடையுள்ளவர் அதிககாலம் ஜீவித்திருக்கமுடியுமா? | 25—26 |
| சிகித்சை குறிப்புகள் பண்டிட் நாராயணய்யங்கார் | 26—28 |
| சித்தர் முறை பண்டிட் நாராயணய்யங்கார் | 28—32 |

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள்நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—
Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
No. 2, Police Station West Lane, Madura.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—40.

[விலை 0—3—0]

SL
L:5ணஉ11,N25vL
N40.2.9.
2|10|87

குழந்தைகளுடைய ஆரோக்யம் முதலியவை
களுக்கு இன்றியமையாத

## பயஸ்யா

**ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்களால் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டது.**

**பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு அவசிய மானஓர் சிறந்த ரஸாயனம்.**

இது தாய்ப்பாலின் அளவையும், ஜீவ ஸத்துக்களையும், மிகுதியாக விருத்தி செய்வதுடன் குழந்தைகளுக்குப் புஷ்டி, பலம், ஆரோக்கியம் முதலியவைகளையும் பூர்ணமாய் அளிக்கிறது. உபயோகிக்கும் விதம் முதலியவை ரஸாயனத்துடன் அனுப்பப்படும். **விலை ரூபாய் 2-4-0 தான்**

தபால் சிலவு வேறு

கிடைக்குமிடம்:—

**ஆத்ரேய ஆயுர்வேத ஓர்க்ஸ்,**

தென்னூர் ரோடு, திருச்சிறாப்பள்ளி.

## IND ANODYNE

**(Haemostatic and Antiseptic).**

The new Ayurvedic substitute for Tr. Iodine. Used with marvellous effects for bleeding wounds, cuts, abrasions, inflammations and septic ulcers.

Becomming very popular.

Sold every-where in bottles of 16 oz., 8 oz., 4 oz., 2 oz., 1 oz.

Prices. Rs. 1-14 Rs. 1/-8 Ans, 4/- As. 0-2-3.

Stockists wanted everywhere.

**Ayurvedic Compound Tinctures Ltd.,**
**Trivandrum.**

Vol 2 No Aug 1940
3 - SEP 1940

# ரஸாயனம் அல்லது காயகல்பம்

## (பத்திராதிபர்)

ரஸாயனம் அல்லது காயகல்பம் என்பது சுதேச வைத்ய நூல்களில் மாத்திரம் கூறப்பட்டுள்ள ஓர் அபூர்வ முறை. பிற வைத்தியங்களில் இம்முறை இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லமுடியாது. Rejuvination என்ற ஓர் வார்த்தை சில காலமாக நமது தேசத்தில் பத்திரிகைகளில் வெளிவருகின்றது. நமது நூல்களில் கூறப்படும் தாதுபுஷ்டி மருந்துகளே அவ்வாங்கில வார்த்தைக்கும் பொருளாகுமேயன்றி ரஸாயனம் என்பது பொருளாகாது. ஆகவே ரஸாயனம் என்பது சுதேச வைத்தியத்தில் மாத்திரம் அமைந்துள்ள ஓர் அபூர்வ முறை என்பது மிகையாகாது. சுதேச வைத்தியங்களிலும் வடமொழி ஆயுர்வேதங்களில் இம்முறை மிகவும் விஸ்தாரமாகச் சொல்லப்படுகின்றது. இம்முறை இருவகையாகவிருக்கின்றன. மூலிகை வகைகளால் செய்யப்படும் முறை முதலாவதாகும். ரஸம் முதலியவைகளால் செய்யப்படும் முறை இரண்டாவதாகும். முதல் முறையை சரகம் சுசுருதம் வாக் டம் முதலிய நூல்கள் கூறுகின்றன. இரண்டாவது முறையை ஸரத்னஸமுச்சயம் முதலிய நூல்கள் விவரிக்கின்றன. இவ் னைத்தையும் பகுதி பகுதியாக வெளியிடுவோம். ரஸாயன ருந்துகளை குடீப்பிரவேசம் என்ற ரீதியிலும் வாதாதபிகம் என்ற திியிலும் உபயோகிக்கலாம். குடீப்பிரவேச முறைகளை அந்த நியமங்களை யொட்டி அநுஷ்டித்தால்தான் பூர்ண பலன் ஏற்படும். வாதாதபிக முறைகளை குடீப்பிரவேச நியமங்களையொட்டி அநுஷ்டித்தால் மிகுந்த பலன் உண்டு. காற்று, வெய்யில் முதலியவைகளில் அலைந்தும் திரிந்தும் கடுமையான பத்தியங்களை அநுஷ்டிக்காமலும் உபயோகப்படும் மருந்துகளுக்கு வாதாதபிகம் எனப்பெயர். அவவிதமின்றி காற்று வெய்யில் படாமல் குடிஸைக்குள்ளிருந்து மிகுந்த நியமத்துடன் உபயோகப்படும் மருந்துகளுக்கு குடீப்பிரவேசமுறை எனப்பெயர். "குடீப்ரவேச: க்ஷணிநாம் பரிச்சதவதாம்ஹித:l அதோந்யதா து யே தேஷாம் கார்யோ வாதாதபோ விதி:ll இதன் பொருள்—"திரவிய சம்பத் முதலியன புடைத்து அதிக காரியமில்லாமல் அதிக அவகாசமுள்ளவர்கள் குடீப்பிரவேச முறை

அனுஷ்டிக்கலாம். அதாவது குடீப்பிரவேசம் அனுஷ்டிப்பதற்கு ஏராளமான திரவிய சம்பத் இருக்கவேண்டும். ஏராளமான வேலைக் காரர்கள் வேண்டும். தவிர செய்து கொள்பவர்களுக்கு வேறு காரியங்களில் பிரவிருத்தி கூடாது. இவ்விதமுள்ளவர்களே குடீப் பிரவேசம் செய்யலாம். ஆனால் ஏழைகளுக்கும் ரஸாயன முறைகள் உண்டு. அதற்கு வாதாதபிகம் எனப்பெயர். இம்முறைக்கு வேலைக் காரர்கள் அதிகம் தேவையில்லை. ஏராளமான திரவியம் வேண்டிய தில்லை.''

இனி குடீப்பிரவேசமுறையை முதலில் கவனிப்போம். குடீப் பிரவேசம் என்பது வடமொழி. குடீ=குடிசை. பிரவேசம்=நுழை தல். குடிசையில் வசித்தல் என்பது பொருள். அடியில் சொல்லப் படும் கல்பமருந்துகளைக் குடிசையில் இருந்து (வசித்து) உபயோகிக்க வேண்டுமென்பது கருத்து. உலகத்தில் மனிதன் உபயோகிக்கும் திரவியங்கள் இருவகையாக விருக்கின்றன. ஒன்று பத்தியமானது. மற்றொன்று அபத்யமானது. இவற்றுள் அபத்யங்களான வஸ்துக் கள் பிணிகளுக்குக் காரணமாவது பற்றி அவைகளை விவேகிகள் விலக்க வேண்டும் பத்யமான வஸ்துக்களையே உட்கொள்ள வேண் டும். பத்யமான வஸ்துக்களை இருவகையாகப் பிரிக்கலாம். மனிதன் சரீரத்தில் ஆகந்துகமாக வரும் ஜ்வரம் முதலிய நோய்களை விலக்குவது முதல் வகையாகும். ஆரோக்யமுள்ளவன் சரீரத்தில் ஸ்வபாவமாக வரும் நரை, மூப்பு முதலியவைகளை விலக்குவதும் மனதிற்குக் குதூகலமின்மை முதலியவைகளை ஒழிப்பதுமாகிய வஸ்துக்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவை. ஆனால் சில பிணிகளில் சொல்லப்படும் மருந்துகள் அப்பிணிகளை விலக்கு வதுடன் ரஸாயன குணத்தையும் அளிப்பதால் அவைகளும் ரஸா யனங்களாகும். க்ஷயநோயில் மருந்து இனத்தில் சொல்லப்படும் "ஸர்பிர்குடம்" போன்ற மருந்துகள் க்ஷயநோயை விலக்குவதுடன் ரஸாயனமாகவும் தாதுபுஷ்டி மருந்தாகவும் ஆகின்றன. பாண்டு ரோக சிகித்சையில் சொல்லப்படும் "யோகராஜம்" பாண்டுநோயை நீக்குவதுடன் ரஸாயனமுமாகின்றது. அவ்விதமே காசநோயில் சொல்லப்படும் "அகஸ்த்ய ஹரீதகி" என்பது காசநோயை விலக்குவ

துடன் ரஸாயனமுமாகின்றது. இவ்விதம் நோய்களுக்குச்
படும் மருந்துகளில் சில மருந்துகள் ரஸாயனங்களாகவுமாகி
மற்றப் பெரும்பான்மையான மருந்துகள் நோய்களை மா
விலக்குகின்றன. அக்காரணம் பற்றியே இம்மருந்துகளைத்
வகுப்பாகப் பிரித்திருக்கின்றனர். ரஸாயன மருந்துகள் ஆ
வியாதிகளை விலக்கும் மருந்துகளாகவும் ஆகின்றன. ஆகவே
வியாதிகள் அசாத்திய நிலைமையடையும் பொழுது உசிதம்
ரஸாயன மருந்துகளை உபயோகிக்கும்படி நூல்கள் கூறுகின்
ரஸாயன மருந்துகளே வியாதிகளை விலக்க உபயோகப்படும் எ
பக்ஷத்தில் நூல்களில் ரஸாயன மருந்துகள் மாத்திரம்
படலாமே என்ற ஓர் பிரச்னை உதிக்கின்றது. ரஸாயன
மிகுந்த விலையுள்ளவைகளாயும் நியமம் சற்று தள
வேறு ஆபத்துக்களை விளைவிக்கக் கூடுமாதலாலும் வி
அசாத்திய நிலைமைகளிலேயே அவைகளை உபயே
சாஸ்திரங்கள் கூறுவதால் ரஸாயனமல்லாத மற்ற
சாஸ்திரங்களில் இடம் பெறலாயின. ரஸாயனங்க
உபயோகித்தால் நீண்ட ஆயுள், கியாபகசக்தி,
ஆரோக்யம், வாலிபத்தன்மை, நல்லதேஜஸ், கம்பீர
பலம், இந்திரியபலம், வாக்பலிதம் அதாவது சொல்லு
நல்லநிறம் ஆகிய இவை பலிக்கும். "லாபோ பாயோ ஹி
ரஸாதீநாம் ரஸாயனம்" இதன் பொருள்—ரஸம், ரக்தம், பு
ஏழு தாதுக்கள் சரீர நிலைக்குக் காரணமாகின்றன. இவை சரீரத்தைத்
தரித்துக் கொண்டிருப்பதால் இவைகளுக்குத் தாதுக்களெனப்
பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஏழு தாதுக்களும்
கெடாமல் சீர்பட்டிருந்தால் அச்சரீரத்தை அழிவு, முதிர்ச்சி, நோய்
முதலியவை அணுகா. இவற்றுள் ஏதாவது ஒன்று சீர்கெடின் அப்
பொழுது முன் சொல்லிய மூன்றுக்குள் ஒன்றோ அல்லது
மூன்றுமோ சரீரத்திற்குச் சம்பவிக்கும். அது மாத்திரமின்றி
வாதபித்த கபங்களான திரிதோஷங்களும் தன் நிலைமையில் இருப்பது
அவசியம். இவையனைத்தும் வயதை யொட்டியும் ஆகாரதோஷங்
களாலும் சீர்கெடுகின்றன. ரஸாதிகள் சீர்கெடுவதால் சரீரத்தில்
சோம்பல், குதூஹலமின்மை முதலிய தோஷங்கள் காணுகின்றன.

தாதுக்களைச் சீர்படுத்தி சரீரத்தை ஆரோக்யமாகச் செய்து
நீடிக்கச்செய்யும் மருந்துகளே ரஸாயனங்களெனப்படும்.''
ஆகாரதோஷங்களால் முதலில் ரஸ தாது கெடுகின்றது. பிறகு
விதாஹத்தை யடைகின்றது. மாம்ஸதாது தளருகின்றது.
உருகுகின்றது. திரிதோஷங்கள் கெடுகின்றன. சந்தி
கள் தளருகின்றன. மஜ்ஜதாது அஸ்திகளுக்குள்
க்கின்றது. சுக்லமும் க்ஷீணிக்கின்றது. ஓஜஸ், பலம்,
பம் இவை குறைகின்றன. சரீரம் இந்நிலைமைக்கு வந்தவுடன்
துக்கு வட்டம், இளைப்பு, தூக்கம், சோம்பல், ஏக்கம், துக்கம்,
ாகக்குறைவு, சரீரத்தளர்ச்சி, மனதுதளர்ச்சி, மறதி, புத்திக்
ணைத்த காரியத்தைச் செய்யமுடியாமல் வருந்துதல்,
ல் பெருமூச்சு, இவைகள் உண்டாவதுடன் வியாதி
விக்கின்றன. இவைகளுக்குக்காரணங்களாவன—அதிக
புளிப்பு, உப்பு, காரம், க்ஷாரம், விருத்தாஹாரம், வாடிக்
ஆகாரம், எண்ணை சத்தில்லாத ஆகாரம், குருவாயும்
(சித்தமான ஆகாரத்தை நாள் கடந்து உபயோகித்
மாயும் உள்ள ஆகாரங்கள், புதிய தான்யம், உலர்ந்த
ந்த மாமிசம் எள், கொள்ளு, தயிர், மாவுபண்டங்கள்,
ங்கள் இவைகளை உபயோகித்தல், பகலில் தூக்கம்
, அதிகப்புணர்ச்சி, அதிவியாயாமம், ஆகிய இவைகளே.
வேகியானவன் முன் சொன்ன குற்றங்களை விலக்கு
துடன் அக்குற்றங்களை நெடுநாள் செய்து வந்ததால் கெட்டிருக்கும்
சரீரத்தைப் பஞ்சகர்மாக்களால் முதலில் சுத்தம் செய்துகொள்ள
வேண்டும். வமநம், விரேசனம் பஸ்தி சிரோவிரேசனம், அநு
வாஸனம் என்ற இவை பஞ்சகர்மாக்கள், அஷ்டாங்க ஹிருதயம்
முதலியவைகளில் அநுவாஸநத்திற்குப் பதிலாக ரக்த மோசநம்
என்பது சொல்லப்படுகிறது. ''ஸ்நிக்தஸ்ய ஸ்ருத ரக்தஸ்ய
விசுத்தஸ்ய ச ஸர்வதா'' ஸ்நேஹபானம் செய்து பிறகு ரக்தஸ்ராவம்
செய்துதான் ரஸாயனம் ஆரம்பிக்க வேண்டுமென்பது பொருள்.
''ஸ்ருத ரக்தஸ்ய என்று தனித்துச் சொல்லியிருப்பதால் அதன்
அவசியம் புலப்படுகின்றது. வயதின் முற்பகுதி அல்லது நடுப்
பகுதியில் ரஸாயனம் ஆரம்பிக்கவேண்டும்.

பெரியோர்கள், சாதுக்கள், வசிக்கும் துஷ்டஜந்துக்களில்லாததுமாகிய நல்ல மண்ணுள்ள ஓர் இடத்தில் குடிசை கட்டவேண்டும். அக்குடிசை நல்ல அகல நீள உயரமுள்ளதாக இருக்க வேண்டும். குடிசைக்குள் குடிசையாக மூன்று குடிசைகள் கட்ட வேண்டும். அவை அகலமான சுவர்கள் உள்ளதாக இருக்கவேண்டும். சிறிய ஜன்னங்கள் உள்ளதாகவும் வெளியிலுள்ள சப்தம்முதலியவை உள்புகாவண்ணமும் அமைக்கவேண்டும். காற்று சற்றும் கூடாது. ஆனால் அக்குடிசையின் ஓர் பிரதேசத்தில் காற்று சஞ்சாரம் நன்ருக இருக்கும்படி அமைக்கப்படவேண்டும். ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி, இந்த நான்கு மாதங்களில் ரஸாயனம் உபயோகிக்கவேண்டும். சரகத்தில் உத்தராயணத்தில் சேவிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஒன்றுக்குள் ஒன்ருக மூன்று குடிசைகள் கட்டி உள்ளிருக்கும் மூன்ருவது குடிசையில் ரஸாயனம் உபயோகிப்பவன் வசிக்கவேண்டும். அவ்விடத்தில் இருந்துகொண்டு மறுபடியும் விரேசன மருந்து சாப்பிட வேண்டும். வேறு விரேசன மருந்துகள் கூடா. அடியிற்கண்ட மருந்தைச் சாப்பிட வேண்டும். இவ்விரேசனத்தை உபயோகிப்பதற்குமுன் ஸ்நேக ஸ்வேதங்கள் செய்துகொள்ள வேண்டும். கடுக்காய், இந்துப்பு, நெல்லிக்காய், வெல்லம், வசம்பு, வாய்விளங்கம், மஞ்சள் திப்பிலி, சுக்கு, இவைகளைச் சமயிடையாக எடுத்துப்பொடி செய்து (ஒரு தோலா பொடியை) வென்னீரில் கலக்கிச் சாப்பிட வேண்டும். நன்ருக பேதியான பிறகு 3, 5, அல்லது ஏழு நாள் வரையில் அல்லது பழைய மலம் கழியும் வரையில் யவதானியத்தைச் சமைத்து அந்த அன்னத்தை நெய்யுடன் சாப்பிடவேண்டும். பழைய மலம் முழுவதும் வெளிப்பட்ட பிறகு தான் ரஸாயனம் ஆரம்பிக்கவேண்டும். அதில் சரீரக்கூரைக் கவனித்து ரஸாயனத்தைப் பொருக்கிக் கொள்ளவேண்டும்.

இனி ரஸாயன மருந்துகளை அதாவது குடீப்பிரவேசக்கிரமத்தில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய ரஸாயன மருந்துகளைச் சொல்லுகிருேம். வாக்படர் எழுதியுள்ள அஷ்டாங்க ஸங்கிரஹம் என்ற நூலில் தான் ஏராளமான முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சரகம், சுசுருதம், இவைகளில் சுவல்ப முறைகளே காணப்படு

கின்றன. இந்நூல்களிலுள்ள முறைகளனைத்தையும் இங்கு எழுதப் போகிறோம். ஸோமம் என்ற ஓர் திரவியம் உயர்ந்த ரஸாயனமாக சுசுருதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திரவியம் தக்காலம் நமக்குக்கிடைப்பதில்லை. ஆனால் வேதங்களில் அதைப்பற்றிய விவரம் ஏராளமாகக் காணப்படுகிறது. ஸோமம் இல்லாமல் யாகம் செய்ய முடியாது. தக்காலம் அது கிடைக்காமலிருப்பதால் அதற்குப் பதிலாக சிந்திற்கொடி யாகங்களில் ஸோமமாகக் கருதப்படுகின்றது. அதன் விவரம் சுசுருதத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. சுசுருதத்தில் சிகித்ஸாஸ்தானம் 29வது அத்தியாயத்தில் அடியிற்காணுமாறு ஸோமம் கூறப்படுகின்றது. அதாவது—மூப்பு, பிணி, இவைகள் நீங்க ஸோமம் என்ற அமிர்தம் கடவுளால் பூலோகத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரங்களையும் உபயோகிக்கும் விதத்தையும் சொல்லுகிறோம். ஸோமம் என்பது ஒன்றாக விருந்தாலும் அது உண்டாகும் இடம், பெயர், உருவம், குணம் இவைகளின் பேதங்களால் 24 விதங்களாக விருக்கின்றன. அவைகளாவன:—அம்சுமான், முஞ்ஜவான், சந்திரமஸ், ரஜதப்ரபம், தூர்வாஸோமம், கநீயான், ச்வேதாக்ஷம், கநகப்ரபம், ப்ரதானவான், தாளவிருந்தம், கரவீரம், அம்சவான், ஸ்வயம்பிரபம், மஹாஸோமம், கருடாஹிருதம், காயத்ரியம், த்ரைஷ்டுபம், பாங்தம், ஜாகதம், சாங்கரம், அக்னிஷ்டோமம், ரைவதம், யதோக்தம், உடுபதி, என 24 விதங்களாக இருக்கின்றன. இந்த ஸோம வகைகள் அனைவற்றிற்கும் இலைகள் 15 தான் உண்டு. சுக்லபக்ஷம் பிரதமைதிதி முதல் பிரதிதினம் ஒவ்வொரு இலை முளைத்துப் பௌர்ணமியில் 15 இலைகளுடன் இருந்து மறுநாள் முதல் தினம்தினம் ஒவ்வொரு இலையாக உதிர்ந்து அமாவாசையன்று இலை ஒன்றும் இல்லாமல் தண்டு மாத்திரம் மீதமாக இருக்கும். (இவைகளுக்குக் கிளைகள் முளைக்க மாட்டா) சிலவற்றிற்குக் கிளைகள் இருந்தாலும் பதினைந்து இலைகளுக்குமேல் எதிலும் இருக்கமாட்டாதென்பது இவைகளின்முக்கிய லக்ஷணம். "விசேஷதஸ்து வல்லீ ப்ரதான க்ஷுபாதய: ஸோமா: பக்ஷயிதவ்யா:" என்று சொல்லியிருப்பதால் ஸோமங்கள் கொடியாகவும் அதாவது கிளைகள் இல்லாத தனிக்கொடியாகவும், கிளைகளுள்ள கொடிகளாகவும், சிறு பூண்டுகளாகவும் இருக்கக்கூடுமென்று

புலப்படுகின்றது. எல்லா வகைகளிலும் கிழங்குகளும் பாலும் தண்டும் இருக்கும் இலைகள் பல விதங்களாக இருக்கும். இவைகள் ஹிமயம், அர்பதம், ஸஹ்யம், (காவேரி நதி உண்டாகும் மலை) மகேந்திரம், மலயம் ஸ்ரீபர்வதம், தேவகிரி, தேவஸஹம் பாரியாத்ரம், விந்தியம், என்றமலைகளிலும் தேவஸுந்தம் என்ற பள்ளத்தாக்கிலும் காணப்படுகின்றன. விதஸ்தா என்ற நதிக்கு வடக்கு திக்கில் உள்ள உயரமான ஐந்து மலைகளுக்கு நடுவில் ஓடும் ஸிந்து என்ற நதியில் சந்திரமஸ் என்ற ஸோமம் காணப்படும். அதன் சுற்றுப்புறங்களில் முஞ்ஜவான் அம்சுமான், என்ற ஸோமங்கள் முளைக்கின்றன. காச்மீர தேசத்தில் க்ஷுத்ரகமானஸம் என்ற ஓர் ஸரஸ் (தடாகம்) இருக்கின்றது. அதன் சுற்றுப்புரங்களில் காயத்ரியம், த்ரைஷ்டுபம், பாங்தம் ஜாகதம், சாங்கரம், என்ற ஸோமங்களும் மற்ற ஸோமங்களும் இருக்கின்றன. இவ்விதம் அத்புத மூலிகைகள் இருந்தும் ஜனங்கள் இவைகளை உபயோகிக்காமலிருப்பதற்கு ஏழு காரணங்கள் உண்டு. அறியாமை, (ரஸாயனம் ஒன்று இருக்கிறதென்பதை தெரிந்து கொள்ளாமை) முயற்சியின்மை, மனஉறுதியின்மை, செல்வமில்லாமை, ஸ்வாதந்திரியமின்மை, அதர்மச்செய்கை, ஸோமம் முதலிய மூலிகைகளின் அலாபம் ஆகிய இவைகளே. இவைகளுள் அம்சுமான் என்ற ஸோமம் நெய் வாசனையுடன் கூடியது. ரஜதப்பிரபம் நல்ல கிழங்குடன் கூடியது. முஞ்ஜவான் என்பது வாழைக்கிழங்குபோன்ற கிழங்குடன் கூடியது. சந்திரமஸ் என்பது தங்கநிறமுள்ளதாக இருக்கும். இது தண்ணீரில் மிதந்துகொண்டிருக்கும். கருடாஹிருதம்; சுவேதாக்ஷம் என்ற ஸோமங்கள் வெளுப்பாயும் பாம்பு சட்டை போன்றும் மரத்தையொட்டி முளைத்தும் இருக்கும்.

ஸோமங்களை உபயோகிக்கும் விதம்—எலலா ஸோமங்களுக்கும் கிழங்குகள் உண்டு. அக்கிழங்குகளைக் கொண்டுவந்து அதிலுள்ள பாலை எடுத்து உபயோகிக்க வேண்டும். ஸோமங்களின் தண்டு, கிளை, முதலியவைகளையும் உபயோகிக்கலாம். யாகத்திற்காக ஸோமம் கிரஹிக்கும் முறைப்படி ஸோமத்தை கிரஹிக்கவேண்டும். அம்சுமான் என்ற ஸோமத்தின் கிழங்கைக் கொண்டுவந்து தங்க ஊசியால் அதைக் குத்தி தங்கப்பாத்திரத்தில் பாலைப்பிடிக்க வேண்

டும். அப்பாலில் ஓர் அஞ்ஜலி அளவு அதாவது தோலா 16 இடையுள்ள பாலை ஒரே தடவையில் சாப்பிடவேண்டும். அதாவது பாலை கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடக்கூடாது. ஒரே தடவையாக ருசி பார்க்காமல் சாப்பிடவேண்டும். மீதியுள்ள பாலை தடாகம் முதலியவைகளில் கொட்டிவிட வேண்டும். இவ்விதம் ஸோமம் உபயோகித்தவன் காற்று வீசாத இடத்தில் வேறு யோசனைகளைச் செய்யாமல் உட்கார்ந்திருக்கலாம். நிற்கலாம். நடக்கலாம். ஆனால் படுக்கக்கூடாது. சாயங்காலத்தில் பத்தியமான ஆகாரம் சாப்பிட்டு தர்ப்பைகளால் செய்யப்பட்ட படுக்கையில் கிருஷ்ணாஜினத்தை விரித்து அதில் படுக்கவேண்டும். தாகமிருந்தால் அல்பமாகக் குளிர்ந்த நீரைக்குடிக்க வேண்டும். பிறகு மறு நாள் காலையில் எழுந்திருந்து அப்படியே உட்கார்ந்திருக்கவேண்டும். உட்கொண்ட ஸோமம் ஜீர்ணமானவுடன் அவனுக்கு வாந்தி யுண்டாகும். ரத்தம் கலந்து கிருமிகளுடன் வாந்தி செய்த பிறகு சாயங்காலத்தில் கொதிக்க வைத்து ஆறின பசும்பாலைக் கொடுக்கவேண்டும். மூன்றாவது நாள் கிருமிகளுடன் பேதியாகும். சாஸ்திரவிருத்தமான ஆகாரம், தானம்பெறல், இவைகளால் சரீரத்தில் உண்டான தோஷங்கள் விலகி சரீரம் சுத்தமாக ஆகும். பிறகு சாயங்காலம் ஸ்நானம் செய்து முன்போல பசும்பாலை உபயோகிக்க வேண்டும். அன்று மிருதுவான மண்ணால் தயாரிக்கப்பட்ட படுக்கையில் வெண்பட்டை விரித்து அதில் படுக்கவேண்டும். நான்காவது நாள் அவனுடைய உடம்பில் வீக்கம் உண்டாகும். அன்று சாயங்காலத்திலும் முன்போல பசும்பாலை உபயோகிக்க வேண்டும். ஐந்தாவது ஆறுவது நாட்களிலும் இவ்விதமே இருக்கவேண்டும். அவ்விருநாட்களிலும் காலையிலும் சாயங்காலத்திலும் இரண்டு வேளைகளிலும் பசும்பாலைக் கொடுக்க வேண்டும். பிறகு ஏழாவது நாளில் தோல், மாமிசம், இவை அகன்று எலும்பு மாத்திரம் மீதியுள்ளவனாக ஆகி அந்த ஸோம மஹிமையால் மூச்சுக்காற்று மாத்திரம் உள்ளவனாகக் காணப்படுவான். அன்று இளஞ்சூடான பாலால் ஸ்நானம் செய்துவைத்து எள்ளு, அதிமதுரம், வெள்ளைச்சந்தனம், இவைகளைச் சமயிடையாக இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடியை பாலில் கலக்கி சரீரத்தில் பூசி முன்சொன்னபடி பசுப்பாலை ஆகாரமாகக் கொடுக்கவேண்டும். பிறகு எட்டாவது

நாள் காலையிலேயே முன்போல பசும்பாலால் ஸ்நாநம் செய்து வைத்து சந்தனப்பொடியை உடம்பு முழுவதும் பூசி முன்போல பசும்பாலே ஆகாரமாகக் கொடுத்து மண்படுக்கையை விலக்கி வெண் பட்டு விரித்த படுக்கையில் படுக்கவேண்டும். பிறகு அவனுக்குச் சரீரத்தில் தோல் உரிந்து கழண்டு போகும். பற்கள், நகங்கள், மயிர்கள், ஆகிய இவை உதிர்ந்து போகும். ஒன்பதாவது நாள் முதலாக அவனுக்கு அணுதைலம் தேய்த்து கட்பல கஷாய ஜலத்தால் ஸ்நாநம் செய்து வைக்கவேண்டும். பத்தாவது நாளும் இவ்விதமே செய்யவேண்டும். பிறகு இவனுடைய சரீரத்தில் மேல் தோல் ஸ்திரப்படுகின்றது. 11, 12, வது நாட்களிலும் இவ்விதமே செய்யவேண்டும். 13வது நாள் முதலாக கட்பல கஷாயத்தால் ஸ்நாநம் செய்யவேண்டும். 16வது நாள் வரையில் இவ்விதமே செய்யவேண்டும். 17, 18, வது நாட்களில் பற்கள் முளைக்கும். அது முதல் பால் சேர்த்த அரிசிக்கஞ்சி சாப்பிடலாம். 25வது நாள் வரை இவ்விதம் செய்யவேண்டும். அதற்குப் பிறகு காலை, சாயங் காலம் ஆக இரு வேளைகளிலும் பாலும் சாதமும் சாப்பிடலாம். பிறகு இவனுக்கு நகங்கள் முளைக்கும். தலைமயிரும் முளைக்கும். தோலும் பளப்பளப்பாக ஆகும். ஒரு மாதம் சென்ற பிறகு தலையை மொட்டை அடித்துக் கொள்ளவேண்டும். விலாமிச்சம் வேர், சந்தனம், கருப்பு எள், இவைகளைப் பால் விட்டு அரைத்துத் தலையில் பூசிக்கொள்ளவும். அல்லது பாலால் ஸ்நாநம் செய்யலாம். இதற்குப்பிறகு ஏழாவது நாளில் (அதாவது 37வது நாளில்) மயிர் வளரும். பிறகு மூன்று நாள் கழித்து (அதாவது 40வது நாளில்) உள் குடிசையிலிருந்து (அதாவது மூன்றுவது குடிசையிலிருந்து) இரண்டாவது குடிசைக்கு வந்து முகூர்த்தகாலம் அதில் இருந்து விட்டு உடனே முன்போல உள் குடிசைக்குப் போய்விட வேண்டும். அன்று முதல் பலா தைலத்தால் ஸ்நாநம் செய்யலாம். எண்ணெயைப் போக்க யவதானியப்பொடியை உபயோகிக்கவும். இளஞ்சூடான நீரால் ஸ்நாநமும் அஜகர்ண கஷாயத்தால் உடம்பு தேய்த்தும் கொள்ள வேண்டும். விலாமிச்சம்வேர் சேர்ந்த கிணற்று நீரால் ஸ்நாநம் செய்யலாம். சந்தனம் பூசிக்கொள்ளலாம். கஞ்சி முதலியவை களில் நெல்லிக்கனி ரஸம் சேர்க்கலாம். பால், அதிமதுர கஷாயம்

இவைகளில் கொதிக்க வைத்த கருப்பு எள்ளை உபயோகிக்கலாம்.
இவ்விதம் பத்து நாள் செய்யவேண்டும். பிறகு பத்து நாள் இரண்டா
வது குடிசையில் வசிக்கவேண்டும். பிறகு வெளிக்குடிசையில் பத்து
நாள் (அதாவது 60 நாட்களுக்குமேல் 70 நாள் வரை) வசிக்க வேண்
டும். குடிசைக்கு வெளியில் வந்து சற்று நேரம் வெய்யில், காற்று,
இவை படும்படி இருக்கலாம். பிறகு பத்து நாள் கோபம் முதலிய
வையின்றி அமைதியாக இருக்கவேண்டும். இவ்விதம் 80 நாள்வரை
யிருந்து பிறகும் 10 நாள் வரை இதே கிரமத்தில் வெளிக்குடிசை
யில் வசித்து நான்காவது மாதத்தில் ஓர் பௌர்ணமியில் குடிசையை
விட்டு வெளிவந்து தன் இஷ்டம் போல போகலாம். இவ்வித நிய
மத்துடன் முன்சொன்ன ஸோமங்களில் ஒன்றை உபயோகித்த
வனுக்கு பத்தாயிரம் வருஷம் வரை ஆயுள் நீடிக்கும். மிகுந்த
பலமும் நினைத்த இடங்களுக்குப் போகும்படி அபூர்வ சக்தியுமுண்
டாகும். நல்ல அழகும் புத்திக்கூர்மையும் உண்டாகும். அம்
சுவான் என்ற ஸோமத்தின் பாலை தங்கப்பாத்திரத்திலும் சந்திரமஸ்
என்ற ஸோமத்தை வெள்ளிப்பாத்திரத்திலும் மற்ற ஸோமங்களை
தாமிரபாத்திரம், மண்பாத்திரம், அல்லது மான்தோல் ஆகிய இவை
களுக்குள் ஏதாவது ஒன்றிலும் எடுக்கவேண்டும்.

இவ்விதம் சுசுருதத்தில் சொல்லிய ஸோமங்கள் 24ம் தக்காலம்
யாருக்கும் கிடைப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இவைகளை
மறந்து போன திரவியங்களாகக் கொள்ளவேண்டும். தக்காலம்
ஹிமாலயத்தின் உச்சிப்பிரதேசங்களில் ஓர் கொடி கிடைக்கின்றது.
அதற்கு ஸோமவல்லீ என்று பெயர் இடப்பட்டிருக்கின்றது. அதி
லிருந்து ஆங்கில வைத்தியத்தில் Ephidrine என்ற ஓர் உப்பு தயார்
செய்து ஆஸ்த்மா நோயில் ஏராளமாக உபயோகிக்கப்படுகின்றது.
இக்கொடி சைன வைத்தியர்களால் சுமார் மூவாயிரம்வருஷங்களுக்கு
முந்தியே கண்டுபிடிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது.
முன்சொன்ன ஸோமங்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.
ஸோமங்களுக்கு இலை பதினைந்துக்குமேல் இருக்கக்கூடாது
என்பது முக்கிய லக்ஷணம். வாக்படம் முதலியவைகளில் இந்த
ஸோமங்கள் கிடைக்காத காரணம். பற்றி இவைகள் வர்ணிக்கப்பட
வில்லை. சரகத்தில் விவரமில்லாமல் ஸோமம் என்று ஓர் ரஸாயன

மூலிகை சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற ரஸாயனங்களை அடுத்த சஞ்சிகையில் விவரிப்போம்.

---

ராஜயக்ஷ்மாவும் இறந்த சர்ப்ப சரீரங்களுடைய பிரயோஜனமும்.

**போபால்—வநாதிகாரியின் அநுபவம்**

**(ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள் ஆத்ரேய ஆயுர்வேதிக், ஒர்க்ஸ், தென்னூர் ரோட் திருச்சி.)** எழுதியது

1940ஆ ஜூலை 2வது வாரத்தில் ஒரு நாள் ஹிந்து பத்திரிகையில்மேற்கண்ட விஷயம் எழுதப்பட்டிருந்தது, இதன் விவரத்தை தெரிவிக்கும்படி போபால் எஸ்டேட்டின் வநாதிகாரிக்கு நான் நேரில் எழுதினேன். மேற்படியாரிடமிருந்து எனக்கு வந்த பதில் கடிதத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

"இறந்த ஸர்ப்பசரீரங்கள் ராஜயக்ஷ்மாவில் மிகவும் உபகாரமானது என்ற விஷயம் நான் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ள புதிய சமாசாரமல்ல. இது யூனானி வைத்திய சாஸ்திரங்களில் வெகு காலத்திற்கு முந்தியபழைய புஸ்தகங்களிலேசொல்லப்பட்டதுதான். ஆனால் என்னால்தான் முதல் தடவையாக போபால் ஸம்ஸ்தானத்தில் அனுபவத்தில்கொண்டு வரப்பட்டது. இங்கு செய்த பிரகாரமாவது முதலில்ஸர்ப்பங்களைக் கொன்று அதன் விஷப்பைகளுடன் கூடவே அவைகளை பூமியில் புதைத்து ஒரு வகை எரு (Manure) தயாராக்கப்பட்டது. இந்த எரு புழுங்கித்தயாராக சுமார் நான்கு மாஸ காலத்திற்குமேல் ஆகிறது. இந்த ஸர்ப்ப எருவை உபயோகப்படுத்திப் பதமான பூமியில் கரும்பு பயிரிடப்படுகிறது. இக்கரும்பை நன்றாக முற்றும் வரை ஒரு வருஷகாலம் முடிய வளர்க்கவேண்டும்.

சென்ற வருஷத்தில் நான் இவ்வாறு பயிர் செய்த கரும்புக் கழிகள் சென்ற நவம்பர் மாஸத்தில் தயாராகின. (உபயோகிக்கும் வழி:—இந்தக் கரும்பின் சில துண்டங்களை ராஜயக்ஷ்மிகள் காலையில் மட்டும் வெறும் வயற்றில் கடித்துச் சாப்பிட வேண்டும். மற்ற

வேறு மருந்துகள் சாப்பிடக்கூடாது.) சென்ற நவம்பரில் போபால் ஸமஸ்தானத்தில் உள்ள ராஜயக்ஷ்மிகளுக்கும் வெளியூரில் உள்ள ரோகிகளுக்கும் கூட பலருக்கு இந்தக் கரும்புத்துண்டங்கள் தர்ம மாக அளிக்கப்பட்டன. இக்கரும்புத்துண்டம் வாங்கிச் சாப்பிட்ட ஒவ்வொருவரும் தேர்ச்சி பெற்ற டாக்டர்களால் வியாதி நிதானம் செய்யப்பட்டு ராஜயக்ஷ்மீ என்று பிரமாணபத்திரம் கொடுக்கப் பட்டவர். நான் இந்தக்கரும்புத் துண்டத்தை மருந்தாகக் கொடுத்துச் சாப்பிட்ட எல்லா ரோகிகளும் ஆரம்பித்து 21 நாட் களுக்குள்ளாகவே நல்ல குணபாகத்தை யடைந்து எனக்கும் நேரில் தெரிவித்தனர். ஜ்வரம் நின்றுவிட்டது. கபத்தில் (Sputum) பூதக்கண்ணாடி பரிசைஷயில் ராஜயக்ஷ்ம ஜீவாணுக்களுடைய (T. B. Bacilli) அறிகுறி அணுவளவும் இல்லை. சுவாஸாசயங்களும் (Lungs) மிகச்சுத்தமாகி விட்டன.

என்னிடம் கடைசித்தடவையாக ஷெடி மருந்துக் கரும்பு சாப்பிட்டுக்கொண்டு இருந்த ஒரு ரோகி இங்கு இருக்கும்போது என்னுடைய ஸஹோதரர் டாக்டர் மஜ்ஹர் J. M. S. M. S. C.M.B Ch B. (Edin) D T.M. Liverpool, அவர்களும் என்னுடன் கூட இருந்துகொண்டு இந்த ஒரு ரோகியின் பூர்ணகால சிகித்ஸையை கூடவே முற்றிலும் கவனித்துக்கொண்டிருந்தார். இந்த ரோகி 21 நாள் தான் கரும்பு தின்றான். இதற்குள் முற்றிலும் குணமடைந்து விட்டான், என் ஸகோதரருக்கு ஆங்கில வைத்தியராயினும் பெரிய வியப்பு ஏற்பட்டுவிட்டது. அடுத்த வருஷத்தில் இந்தப்பயிராகும் கரும்பை விஞ்ஞான சாஸ்திரப்படி பரிசோதனை செய்வதற்கு உத்ஸாகமுள்ளவராக இருக்கிறார்.

போபால் ஸமஸ்தானத்தில் கரும்புப்பயிர் நவம்பர் மாஸத்தில் பூர்ண விளைவை அடைவது வழக்கம். மழை காலத்தில் காடுகளில் ஸர்ப்பங்கள் இங்கு ஏராளமாய் அழிக்கப்படுவதுண்டு. ஸர்ப்பங்கள் கிடைக்குமளவுக்கு ஏற்றவாறு எரு தயாரித்து அதற்குத்தகுந்த அளவில் கரும்பு பயிரிடப்பட ஏற்பாடு செய்துள்ளோம். ஸமஸ் தானத்தில் டாக்டர் மூலம் ராஜயக்ஷ்மா என்று நிர்த்தாரிக்கப்பட்ட ரோகிகளுக்கு தர்மார்த்தம் கரும்புத்துண்டங்கள் கொடுக்கப்படு கின்றன.'' என்று கடிதத்தின் சுருக்கம்.

## நான் அறிய விரும்பும் விஷயங்கள்:—

நமது தென்னிந்தியாவில் விசேஷித்து கேரள தேசங்களில் ஸர்ப்பங்கள் அதிகம். விஷவைத்தியர்களுமதிகம். இது மாதிரி ஸர்ப்பபிரேத தேஹத்தால் ராஜயக்ஷ்மாநிவிருத்தியான தாகநம்தேசத்தில் பிராசீன ஸம்பிரதாயங்களில் **அநுபவம்** உண்டா? நமது ஆயுர்வேத கிரந்தங்களில் எங்காவது இதைப்பற்றி உபதேசமிருக்கிறதா?

இந்த விஷயங்களையும் இதைப்பற்றிய சர்ச்சைகளையும் தயை செய்து வைத்திய பண்டிதர்கள் நமது "சந்திரிகை" மூலமாகப் பிரகாசம் செய்தால் லோகோபகாரமாய் இருக்குமென்று வேண்டுகிறேன்.

**V. B. நடராஜ சாஸ்திரி**
6—8—40 ஆயுர்வேதசார்ய

---

**குறிப்பு:**—ஸ்ரீமான் ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் எழுதியுள்ள வைத்தியச்செய்தி வைத்தியர்களின் விசேஷ கவனத்தைப் பெறுமென்று நம்புகிறோம். T. B. என்று பிரசித்தமான க்ஷயநோய் தத்காலம் நமது தேசத்தை வாட்டி வருவது யாவருமறிந்த விஷயம். அதற்கு நாளது பரியந்தம் தகுந்த மருந்து கண்டுபிடிக்கப்பட வில்லையென்பதும் யாவருமறிந்ததே. இறந்த சர்ப்பசரீரங்களிலிருந்து தயாரிக்கப்படும் ஓர் எருவைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்ட கரும்பால் இவ்வியாதி வெகு சீக்கிரத்தில்குணப்படுவதாக இவ்விஷயத்தைக்கண்டுபிடித்த நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இதில் கவனிக்க வேண்டிய அம்சம் இரண்டு விதமாக விருப்பதாக நாம் நினைக்கின்றோம். அதாவது ஷை சர்ப்பசரீரங்களுக்கு அக்குணமிருப்பதாக நமது நூல்கள் கூறுகின்றனவா என்பது ஒன்று. ஷை எருவால் சாகுபடி செய்யப்படும் கரும்புகளுக்கு மாத்திரம் அக்குணம் இருப்பானேன். ஷை எருவால் சாகுபடி செய்யப்படும் நெல் கோதுமை முதலியவைகளுக்கும் அக்குணம் ஏன் இருக்ககூடாது என்பது இரண்டாவது.

சாஸ்திரிகள் அவர்கள் எழுதியுள்ளபடி நம் நாட்டில் சர்ப்பசரீரங்களால் க்ஷயநோயை நிவிருத்தி செய்ததாக இது வரையில் கேட்டதில்லை. மலையாளத்தில் க்ஷயநோய்களுக்குப் பெரும்பான்மையாக ச்யவனப்பிராசம் போன்ற லேகியங்கள், கஷாயங்கள், கிருதங்கள், இவைகளாலேயே சிகித்ஸை நடந்து வருகின்றதே யன்றி நமது நூல்களில் கூறப்பட்ட பஸ்மசிந்தூரங்களைக் கொண்டு கூட சிகித்ஸை செய்யப்படுவதில்லை. ஆகவே ஸர்ப்பசரீரங்களைப் பற்றிய விஷயம் அவர்களுக்கும் நூதனமானதே. ஆனால் ஸர்ப்பசரீரங்களுக்கு முன் சொல்லிய குணம் உண்டு என்பது ஆயுர்வேத சம்மதமானது. அஷ்டாங்க ஹிருதயத்தில் சிகித்ஸா ஸ்தானம் 5வது அத்தியாயத்தில் 6-வது சுலோகம் பின்வருமாறு:—

"காகோலூக விருக த்வீபி கவாச்வ நகுலோரகம் ।
கிருத்ர பாஸ கரோஷ்டிரம் ச ஹிதம்"

இதன் பொருள்—காக=காக்கை. உலூக=கோட்டான். விருக=செந்நாய். (இது காட்டில் வசிக்கும் நாய் போன்ற ஜந்து.) த்வீபி=புலி. கௌ=மாடு. அச்வ=குதிரை. நகுல=கீரி உரகம்=சர்ப்பம். கிருத்ரம்=கழுகு. பாஸ=ஓர் பக்ஷி. கர=கழுதை. உஷ்ட்ரம்=ஒட்டகை. இவைகளின் மாமிசம் க்ஷயநோய்க்கு நல்லது. சுசுருதம் உத்தரதந்திரம் 41வது அத்தியாயம் 34வது சுலோகத்திலும் "பிலேசய ஆகூன்" பிலேசய=சர்ப்பம். ஆகு=எலி. இவை முதலிய மாமிசங்கள் க்ஷயத்தில் குணம் கொடுப்பவைகளாகக்கூறப்பட்டிருக்கின்றன. சரகம் சிகித்ஸா ஸ்தானம் 9வது அத்தியாயத்தில் 147வது சுலோகத்தில் "வர்மி சப்தேநச உரகான்" வர்மி என்பது ஓர் மீன். வர்மிமாமிசம் என மறைத்து சர்ப்பமாமிசத்தை க்ஷயரோகிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஸர்ப்பமாமிசம் இன்னும் சில குறிப்பிட்ட மாமிசங்களைப்போல க்ஷயநோயில் உபயோகிக்கலாமென்பது ஆயுர்வேத சம்மதமென்பது விசதமாகின்றது. ஆயுர்வேதத்தில் முக்கிய நூல்களாகக்கருதப்படும் இம்மூன்றிலும் சர்ப்பசரீரம் அங்கிகரிக்கப்பட்டிருப்பதால் அதன் முக்கியத் தன்மையும் புலப்படுகின்றது. ஆனால் இதைக்கண்டு பிடித்திருக்கும் நிபுணர் சொல்லும் விதமாக இது க்ஷய

நோயில் ஓர் அத்புத மருந்தென்பதற்கு நமது நூல்களில் ஆதாரம் காட்டமுடியவில்லை. நிபுணருடைய கூற்றையும் அப்படியே அங்கிகரிக்க பண்டிதர்கள் இணங்கார் என்றே நினைக்கிறோம். பத்திராதிபர்.

---

## வைத்தியக்குறிப்புகள்.

## நிகில பாரத வர்ஷ ஆயுர்வேத மஹாஸம்மேளனம்.

மேற்படி மஹாஸபையின் 30வது மஹாஸம்மேளனம் இவ்வருஷத்தில் உத்தர தேசத்தில் 'லக்னோ' எனப்படும் லக்ஷ்மணபுரியில் நடக்க ஏற்பாடாகியிருக்கிறது. ஷை ஸம்மேளனத்தின் "ஸ்வாகத காரிணீ ஸபா" ஏற்படுத்த 28—7—40ல் லக்ஷ்மணபுரியில் ஆர்ய ஸமாஜ் மந்திரம் கணேச கஞ்சத்தில் வைத்தியர்களுடைய பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. ஸ்வாகத ஸபையின் அத்யக்ஷபதவிக்கு ஆயுர்வேதாசார்ய, பண்டித ஸ்ரீசிவராமஜீத்விவேதி M.L.A. (மெம்பர், போர்ட் ஆப் இந்தியன் மெடிஸின்) லக்னோ, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆயுர்வேத ரத்ன **பண்டித ஸ்ரீகாந்தஜீ சாஸ்திரி லக்னோ,** ஸ்வாகதஸபையின் மந்திரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மஹாஸம்மேளனம் நாளது வருஷம் டிஸம்பர் மாஸம் கடைசி வாரத்தில் நடைபெறும்.

28—7—40 லக்னோ

---

## மதிப்புரை.

**Ind.—Iodine**—என்ற பூசும் திராவகம் The Ayurvedic Compound Tinctures Ltd. Trivandrum. என்ற கம்பெனியிலிருந்து வரப்பெற்றோம். (ஷை திராவகத்தின் விவரத்தை இந்த சஞ்சிகையின் முன்பக்கத்திலுள்ள விளம்பரத்தில் பார்க்கவும்.) வெட்டுகாயம், வீக்கம், புண், இவைகளில் இத்திராவகத்தை மேலுக்குப் பூசினால் வீக்கம் முதலியவைகள் வேகமாகக் கரைந்து போவதுடன் புண்களும் சிக்கிரம் ஆறிவிடுகின்றது. ஆங்கில வைத்தியத்தில் உபயோகப்படும் Tincture Iodine என்ற மருந்தை விட இம்மருந்து ஷை வியாதிகளில் மிகவும் வேகமாக குணம்

கொடுக்கின்றதெனக் கூறுவது மிகையாகாது. முக்கியமாகச்சுதேச வைத்தியர்களுக்கு இம்மருந்து ஓர் இன்றியமையாத சாதனமாகும். பத்திராதிபர்.

---

## ஆங்கிலவைத்தியத்தின் பெருமையும் ஆயுர்வேதமும்
## (பத்திராதிபர்)

ஆங்கில வைத்தியர்களில் சிலர் சுதேச வைத்தியத்தைக் குறை கூறி தூஷிப்பதையே சுபாவமாகக் கொண்டிருக்கின்றனர். பக்ஷ பாதமில்லாத சில ஆங்கில வைத்தியர்கள் சுதேச வைத்தியத்தை வாயாரப்புகழ்ந்தும் வருகின்றனர். நவீந சாதனங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டிருப்பதைக் காட்டி ஆங்கில வைத்தியத்தை சாஸ்திரீயம் (scientific) எனச்சிலர் சொல்லுகின்றனர். அந்த சாதனங்கள் இல்லாத குறையைக் கொண்டு சுதேச வைத்தியத்தை மூடவைத்திய மென (quackery)ச்சிலர் சொல்லுகின்றனர். வெளித்தோற்றத் திற்கு இக்கூற்று நியாயம்போல புலப்படுமாகிலும் ஆழ்ந்து யோசித் தால் இவ்வாதம் ஊற்றுக்கு நிற்கமாட்டாது. ஒரு வைத்தியம் சாஸ்திரீயமானது அல்லது அசாஸ்திரீயமானது என்று நிர்ணயிக்க வேண்டுமானல் பலனைக் கொண்டே நிர்ணயிக்கவேண்டும். அதாவது நோய்களில் மருந்தைக்கொடுத்து அதனல் ஏற்படும் குணபாகங்களை கொண்டு அவ்வைத்தியத்தின் மேன்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டுமேயன்றி அபூர்வமான சாதனங்கள் இருப்பதை மாத்திரம் கொண்டு பெருமை பேசுவது பொருந்தாது. சுதேச வைத்தியத் தில் ஆங்கிலத்தில் போல சாதனங்கள் அமையவில்லை யென்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அச்சாதனங்கள் ஒருவாறு வியாதியைக் காட்டுகின்றன வென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறோம். இவற்றால் வியாதி குணப்பட்டுவிட்டதாவெனக் கேட்கிறோம். வியாதி குண மாவதற்கு உயர்ந்த மருந்தல்லவோ வேண்டும். அம்மருந்துகள் எம்முறையில்மலிந்திருக்கின்றனவென்பதே கேள்வி. காய்ச்சல் முதல் எந்த வியாதிகளை எடுத்துக்கொண்டாலும் அதற்குரிய மருந்துகள் எந்த முறையில் சொல்லப்பட்டிருக்கின்றன வென்பதை ஆலோசித் தால் சுதேச முறைகளைத் தவிர்த்து வேறு முறைகளில் அப்

பெருமையைக் காட்டமுடியாது. Luxor என்ற மேதாவி சுதேச வைத்தியத்தின் பெருமையை வாயாரப்புகழ்ந்து பேசியிருப்பதை ஓர் உதாஹரணமாகச் சொல்லலாம். அவர் கூறுவதாவது—

"ஆங்கில வைத்தியத்தில் நவீநமாக நாம் அடைந்துள்ள அபிவிருத்திகளின் பெருமையனைத்தும் இந்திய தேசிய வைத்தியத்தையே சேர்ந்ததாகும். நாம் இப்பொழுது கையாளும் பற்பல சஸ்திர சிகித்சை, மூக்கில் செய்யும் சஸ்திர சிகித்சை (Rhinoplasty) மூத்திரப்பையில் செய்யும் சஸ்திர சிகித்சை (Lithotomy) ஆகிய இவையனைத்தும் இந்திய தேசிய வைத்தியத்திலிருந்தே பிறந்துள்ளன. இவையனைத்தும் ஆங்கில வைத்தியர்கள் அறிந்து கொள்வதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் அநுஷ்டிக்கப்பட்டு வந்தன. நவீன ஆங்கில வைத்தியத்தில் சஸ்திர சிகித்சையில் மிகப்பிரதானமாகக் கருதப்படும் மூளையில் செய்யப்படும் சஸ்திர சிகித்சை, உதரசஸ்திர சிகித்சை, ஆகிய இவைகளையும் இந்தியாவில் பழைய காலத்து வைத்தியர்கள் அநுஷ்டித்திருக்கின்றனர். நவீந தந்த சிகித்சை அதன் பூர்ண அங்கங்களுடன் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்தே இந்து வைத்தியர்களால் அறிந்து அநுஷ்டிக்கப்பட்டிருந்த தென்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். இடுக்கி சாமணம் போன்ற தந்த சஸ்திரங்களால் கெட்டபற்களைப்பிடுங்குதல்எகிரில் வரும்புண்களைக் கீறிவிடுதல் பற்களில் உண்டாகும் கட்டிகளை (இதற்குஆங்கிலத்தில் Tartar என்றும் வடமொழியில் தந்த சர்க்கரா எனவும்பெயர்) எடுத்தல் செயற்கைப்பற்களை அமைத்தல் இவைதக்காலம்தான் ஆங்கில வைத்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவையனைத்தும் பழைய காலத்து ஆயுர்வேத நூல்களில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. பழையகாலத்து வழக்கப்படி சில ஜனங்கள் தங்கள் முன் பற்களை தங்கத்தாலும் கற்களாலும் இழைத்து அலங்காரம் செய்துகொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். இவ்விதம் பற்களில் சந்து செய்து அதில் உள்ள நரம்புகளுக்குக் கெடுதி வராமல் தங்கம் அல்லது மணிகளை வைத்து இழைப்பதிலுள்ள கஷ்டம் எவ்வளவென்பது ஆங்கில பல்வைத்தியர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆயிரக்கணக்கானவர்கள்

கெடுதி ஒன்றும் இல்லாமல் இந்த அலங்காரத்திற்காகப் பற்களில் ஓட்டை (சந்து) செய்து கொண்டிருக்கின்றார்கள். நிபுணரான ஆங்கில பல் வைத்தியர் கூட திகைக்கும்படி அவ்வளவு நேர்த்தியாக இக்காரியம் செய்யப்படுகிறது. அது மாத்திரமின்றி பற்களின் சுகாதாரமாக விஷயமாக ஆயுர்வேத நூல்களில் ஓர் அத்தியாயம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவ்வத்தியாயத்தில் பற்களில் தேய்க்கும் பசை பொடி, குச்சி, முதலியவை சொல்லப்பட்டிருக்கின்றன தக்காலமிருப்பது போல முற்காலத்திலும் ஹிந்துக்கள் வேப்பம் குச்சி கருவேலங்குச்சி இவைகளைப் பல் தேய்க்கும் சாதனங்களாக உபயோகித்திருக்கின்றனர். பல்பொடிக்காக பல சரக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புகையிலை, உப்பு, சுட்ட கொட்டைப்பாக்கு முதலியவை அவைகளுள் முக்கியமானவை. தத்காலம் ஆங்கில பல் வைத்தியத்தில் சொல்லப்படுவதுபோல பற்களின் சுகாதார விஷயமாகச் சிலமுக்கிய உபதேசங்கள் ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சில உதாஹரணங்கள் கூறுகின்றோம். மிருதுவான ஆகாரங்களை ஆரம்பத்திலும் கடினமான வஸ்துக்களை ஆகாரத்தின் நடுவிலும் திரவவஸ்துக்களை ஆகாரத்தின் கடைசி பாகத்திலும் சாப்பிடவேண்டும். வேகமாக ஆகாரத்தை உட்கொள்ளக்கூடாது. ஆகாரத்தை நன்றாக மென்று தின்னவேண்டும். ஒவ்வொரு ஆகாரத்திற்கும் பிறகு பற்களை நன்றாகச்சுத்தம் செய்யவேண்டும். பற்களுக்கு நடுவில் சிக்கியுள்ள துணுக்குகளை அப்புறப்படுத்தவேண்டும். இது போன்ற பல உதாஹரணங்களைச் சொல்லக்கூடும்.

ஜலசிகித்சை, உடம்பு பிடித்தல், மயக்குதல், போன்ற சிகித்சைகள் தத்காலந்தான் ஆங்கிலவைத்தியத்தில் கண்டுபிடிக்ககப்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளை வெகு வருஷங்களுக்கு முன் இந்து டாக்டர்கள் அனுஷ்டித்து வந்திருக்கின்றனர். பில்லிமோரியா (Billimoria) என்ற ஸ்தலத்திற்குப் பக்கத்திலுள்ள ஹூனை (Hoonai) என்ற இடத்திற்கும் கல்யான் (Kalyan) என்ற ஸ்தலத்திற்குப் பக்கத்திலுள்ள வஜ்ரேசுவரி (Vajrevari) என்ற இடத்திற்கும் பிரதிவருஷம் இந்துக்கள் யாத்திரை செய்வதிலிருந்து ஜலசிகித்சையும் இந்தியாவில் பழைய காலங்களில் அனுஷ்டானத்திலிருந்த தென்பதற்குத் தகுந்த அத்தாக்ஷியாக விருக்கின்றது. முன் சொல்லிய இரண்டு

இடங்களிலும் உஷ்ணமான ஜல அருவிகள் இருக்கின்றனவென்பது யாவருமறிந்ததே. சரீரத்தைப் பிடித்துவிடுதல் என்ற விஷயமும் சுதேச நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் இவ் விஷயம் ஹிந்துக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது. சாயங்காலத்தில் தன் புருஷனுடைய தளர்ந்த (வேலை செய்து) அவயவங்களைப் பிடித்துக்கொண்டிருக்கும் பெண்ஜாதிகளை ஒவ்வொரு ஹிந்துக்கள் வீட்டிலும் சாதாரணமாகக் காணலாம். பழைய காலத்தில் ஹிந்து டாக்டர்கள் அனுஷ்டித்து வந்த பிடித்துவிடுதல் என்ற சிகித்சையின் அடையாளமாக இதைக் கருதலாம். ஓர் பிரதேசத்தில் வியாதி பரவி யிருக்கும்பொழுது அவ்வியாதி தன்னைத் தாக்கமலிருக்கும்படி செய்யும் முறை (Immunity) சமீபத்தில்தான் ஆங்கில வைத்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இம்முறையும் ஆயுர் வேதத்தில் சொல்லப்பட்டதே. சிறிய கிராமங்களில் கூட சர்ப்ப வைத்தியர்கள் பாம்பு கடித்தவுடன் கடிவாயில் உறிஞ்சி பாம்பு விஷத்தை சௌக்கியப்படுத்துவதைச் சாதாரணமாகப் பார்க்கின்றோம். வசூரியைத் தடுப்பதற்காகத்தக்காலம் ஆங்கில வைத்தியத்தில் செய்வதுபோல அவ்வளவு நாசூக்காக இல்லாவிட்டாலும் கூட இநாகுலேஷன் என்பது பழைய வைத்தியர்களுக்குத் தெரிந்து இருந்தது. நாம் ஆங்கிலத்தில் சொல்லும் Immunity என்பதை வைஷ்ணவ சக்தி என இந்துக்கள் அழைக்கின்றனர். வியாதியை எதிர்க்கும் சரீரசக்தி என்பது அதன் பொருள். பாண்டுச்சேரியில் வசிக்கும் Dr. Huillet என்பவர் ஹிந்து வைத்தியரான தன்வந்திரிக்கு தடுப்பு அம்மை (Inoculation) முறை தெரிந்து இருந்ததெனக் கூறுகின்றார். அன்னார் Hippocratesக்கு வெகுகாலத்திற்கு முன் இருந்தவர் என்பது யாவரும் அறிந்ததே. ஆங்கில வைத்தியம் என்ற ஓர் பெயர் தெரிவதற்கு வெகு காலத்திற்குமுன்பே வெகு நூற்றுண்டுகளுக்கு முன்பே இந்துவைத்தியர்கள் அனுஷ்டித்து வந்த நாஸா சஸ்திர சிகித்சையும் (Rhinoplasty) பஸ்தி சஸ்திர சிகித்சையும் (Lithotomy) தத்கால ஆங்கில வைத்தியர்களால் முக்கியமாகப் பின்பற்றப்பட்டு இருக்கின்றன. பிராசீன இந்து வைத்தியர்கள் உதர சஸ்திர சிகித்சை மூடகர்ப்ப சிகித்சை (பிரஸவ காலத்தில் குழந்தை வெளிப்படாமல் முரண்படும் காலத்தில்

குழந்தையை வெளிப்படுத்த வயிற்றில் செய்யப்படும் சஸ்திர சிகித்சை) கண்களில் காணும் கேடராக்ட் (Cataract) என்ற நோய்களில் செய்யப்படும் சஸ்திரசிகித்சை ஆகிய இவையனைத்தையுமே அனுஷ்டித்திருக்கின்றனர். அது மாத்திரமல்ல ஆங்கில வைத்தியத்தில் சிரமசாத்தியமாகக் கருதப்படும் மூளை ஆபரேஷன்களையும் இவர்கள் செய்திருக்கின்றனர். Weber என்ற ஆங்கிலமேதாவி தான் எழுதியுள்ள History of Indian Literature என்ற புஸ்தகத்தில் அடியில் காணுமாறு கூறுகிறார்—

"In surgery Indians seem to have attained a special proficiency and in this department Eropean surgeons might still learn something from them, as indeed they have already borrowed from them the operation of Rhinoplasty."

இதன் பொருள்—சஸ்திர சிகித்சையில் இந்துக்கள் விசேஷத் திறமை பெற்றிருந்தரெனக் காண்கிறோம். நாஸா சஸ்திரசிகித்சையில் (மூக்கில் செய்யப்படும் ஆபரேஷன்) ஏற்கனவே இந்துக்களிடமிருந்து ஆங்கில வைத்தியர்கள் கடன் வாங்கிக்கொண்டது போல சஸ்திரசிகித்சையிலும் இந்துக்களிடமிருந்து ஆங்கில வைத்தியர்கள் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய பாகம் இருக்கின்றது.

சஸ்திரசிகித்சையை விவரிக்கும் பிரதானமான ஆங்கில நூல்கள் இந்து நூல்களிலிருந்து கடன் வாங்கிய விவரத்தை ஒளிக்காமல் கூறுகின்றன. Sir Frederick Treeves என்ற ஆங்கில வைத்திய நிபுணர் நாஸா சஸ்திரசிகித்சையை ஆங்கில வைத்தியர்களுக்குக் காட்டிக் கொடுத்ததற்காக கத்தியவாட் என்ற இடத்தைச் சேர்ந்த Prof. Shah (பிரபசர் ஷா) என்பவருக்குத்தன் நன்றியைச் செலுத்தியுள்ளார். இச்சிகித்சையைப் பற்றி எழுதும்பொழுது பெர்லின் நகரத்தைச் சேர்ந்த Dr. Hirschberg என்பவர் கூறுவதாவது—"இந்த (இந்து வைத்தியர்களுடைய) சூக்ஷ்மமான தந்திரங்கள் (ஆபரேஷன் யுக்திகள்) நமக்குத் தெரிந்த பிறகுதான் ஐரோப்பாவில் உள்ள பலவிதமான சஸ்திரசிகித்சைகளும் புதிய உருவம் பெற்றன." ஒரு சரீரத்திலிருந்து தோலை எடுத்துத் தேவையான மற்றொரு சரீரத்தில் தைத்து மூட்டுவதென்ற முறை இந்தியர்

களுடையதே. கிரீஸ், ஈஜிப்ட், முதலிய அன்னிய நாட்டினர் தெரிந்து கொள்ளாத கண் சஸ்திரசிகித்சையை முதல் முதலில் கண்டுபிடித்த பெருமை இந்துக்களுடையதே என அவர் கூறுகிறார். மிகப்பிராசீனமான சுசுருத ஸம்ஹிதை என்ற இந்து வைத்திய நூல் ஆபரேஷனுக்கு வேண்டிய பலவிதமான ஆயுதங்களையும் அதன் பேதங்களையும் கூறுகின்றது. அந்நூல் ஆபரேஷன் செய்வதற்கு முந்தியும் பிந்தியும் ஆபரேஷன்செய்யும் அறையில் சிலமூலிகைப்புகையைப் போடும்படி சொல்லுகின்றது. ஆபரேஷன் ஆயுதங்களையும் கட்டு கட்டுவதற்குரிய உபகரணங்களையும் வென்னீரில் கொதிக்கவைக்க வேண்டுமென்றும் ஆபரேஷனுக்கு முந்தி ஆபரேஷன் செய்ய வேண்டிய பாகங்களைச் சுத்தம் செய்யவேண்டுமென்றும் கூறுகின்றது. அது மாத்திரமின்றி ஆபரேஷன் காலங்களில் நோயாளிக்கு வலி தெரியாமல் இருக்கும்படி செய்யவேண்டிய அவசியத்தையும் முன்னோர்கள் அறிந்திருந்தனர். குளோரோபாரத்திற்குப் பதிலாக சில மருந்துகளை அவர்கள் உபயோகித்து வந்திருக்கின்றனர். "ஸம்மோஹினி" என்ற மூலிகை அவைகளுள் ஒன்றாகும். ஆபரேஷன் முடிந்த பிறகு "ஸஞ்ஜீவனீ" என்ற ஓர் மருந்தை உள்ளுக்குக் கொடுத்து நோயாளிக்குப் பிரக்ஞை வரும்படி செய்து வந்திருக்கின்றனர். "ஸஞ்ஜீவனீ" போன்ற மருந்து ஆங்கில வைத்தியத்தில் காணப்படவில்லை. இந்துக்களுடைய பிராசீனமான பிரசூதி சாஸ்திரம் (Mid-wifery) நமக்குக் கற்பிக்கும் விஷயங்களைவிட அதிக விஷயங்களை ஆங்கிலப் பிரசூதிசாஸ்திரம் கற்பிப்பதாகவில்லை. ஸ்திரீரோக சிகித்சையிலும் மற்ற சஸ்திர சிகித்சையிலும் ஆங்கில வைத்தியத்தில் தத்காலம் கையாளப்படும் சயனவிதியானது புராதன ஹிந்து வைத்தியர்களால் அறிந்து அனுஷ்டிக்கப்பட்டதே. சுலபமாகக்கருதரிப்பதற்கும் பிரஸவத்தைச் சுலபப்படுத்தவும் சரீரத்துள் காணும் ஒழுங்கீனங்களைச் சரிப்படுத்த முக்கிய சாதனமாகவும் கருதப்படும் சயனவிதி முறையில ஹிந்து டாக்டரான "கோகா" என்பவர் நிபுணராக இருந்திருக்கிறார். குஜராத்தில் சாதாரணமாகப் பொதுஜனங்கள் அழைக்கும் "கோக சாஸ்திரம்" அவர் எழுதிய நூலாகும். இந்நூல் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்

கின்றது. இம்முறையை முதல் முதலில் கண்டுபிடித்த பெருமை இந்தியாவைச் சேர்ந்ததே.

சில நோய்கள் கிருமிகளால் காணுகின்றன வென்ற கொள்கையும் அக்கிருமிகளைக்கண்டுபிடிக்கும் மைக்ராஸ்கோப்என்ற ஓர் வகைபூதக் கண்ணாடியும் ஆங்கிலத்தில்இருப்பதுபோலவேஹிந்துக்களிடமிருந்ததென்பது ஊகிக்கப்படுகின்றது. Dr Jenner என்பவர்வசூரிக்கு இனாகுலேஷனைக்கண்டு பிடித்ததற்குப் பலநூற்றாண்டுகளுக்கு முந்தியேஇந்துக்களும் இம்முறையை யறிந்திருந்தனர் என்று ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். ஆங்கிலத்தில் போலவே ஹிந்துக்களுக்கும் மெடீரியா மெடிகா நூல் விரிவாக இருக்கின்றது. தங்கத்தைத் திரவமாக்கிச் சில வியாதிகளில் கொடுக்கலாமென்பதை ஆங்கிலேயர்கள் தத்காலம் தான் கண்டுபிடித்துள்ளார்கள். இம்முறை இந்து டாக்டர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தெரிந்து கொண்டிருக்கின்றனர். ஹிந்துக்கள் மெடீரியா மெடிகாவிலிருந்து பல மருந்துகளை ஏராளமாகக் களவாடியிருப்பதை ஆங்கில நூல்களில் காணலாம். சடாமாஞ்சி, இஞ்சி, மிளகு, திப்பிலி, இவை முதலிய வஸ்துக்கள் முக்கியமாக ஹிந்துக்களையேசேர்ந்தவைகள். இவையனைத்தும் Hippocrates, Dioscorides, Claudius, Galen போன்ற பிராசினர்கள் ஹிந்துக்களிடமிருந்த தெரிந்துகொண்டு தங்கள் நூல்களில் எழுதி வைத்திருக்கின்றனர். டாக்டர் Galen என்பவருக்கு ஆங்கில வைத்திய சாஸ்திரம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. அன்னார் தன் நூலில் சில மருந்துகளை உஷ்ணமாகவும் சில மருந்துகளை குளிர்ச்சியாகவும் உபயோகிக்கும்படி சொல்லியுள்ளார். இம்முறை ஹிந்துக்களிடமிருந்து களவாடப்பட்டதாகத் தோன்றுகிறது. ஏனெனில் இம்முறை இன்றைக்கும் ஹிந்துக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பழைய ஹிந்து நூல்களில் Physiology என்ற பாகமும் அதாவது இயற்கையான சரீரத்தொழிலைப் போதிக்கும் பாகமும் சொல்லப்பட்டிருக்கின்றது. பிராணிகள் உட்கொள்ளும் ஆகாரம் ஜீர்ணமாகும் விதமும் சரீரத்திலுள்ள ரக்த ஓட்டம் முதலியவைகளும் அவைகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. கி. பி. 1628 வருஷத்தில் Dr. William Harvey

என்பவர் சரீரத்தில் ரக்த ஓட்டத்தை முதலில் கண்டுபிடித்ததற்காக மிகப்பிரக்யாதி யடைந்தார். இந்து நூல்களைக்கொண்டே அக்கொள்கையை அவர் அறிந்ததாகச் சொல்லவேண்டும். ஏனெனில் ஹார்வி அவர்கள் பிறப்பதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முந்தியே ரக்த ஓட்டத்தைப் பற்றிய கொள்கையை ஹிந்து வைத்தியர்கள் தங்கள் நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள்.”

இவ்விதம் டாக்டர் லக்ஸார் (Luxor) என்பவர் சுதேசவைத்திய முறைகளை மெத்தப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். இவர்கூறுவது போல ஒரு காலத்தில் சுதேச வைத்தியர்கள் வைத்யாங்கங்கள் அனைவற்றிலும் மிகவும்மேம்பாட்டை யடைந்திருந்தனர் என்பதை யாரும் மறுக்கமுடியாது. திண்டிவனத்திற்குச் சமீபத்தில் ஓர் கிராமத்தில் ஆங்கிலமே யறியாத சிலர் கண்களில் சஸ்திரசிகித்சையை அத்புதமாக இன்றைக்கும் செய்து வருகின்றனர். தேகதத்வ சாஸ்திரத்தில் பயிற்ச்சி இல்லாத குறையால் உள் உறுப்புகளில் சஸ்திரசிகித்சையை தத்காலம் கைவிட்டிருந்த போதிலும் சரீரத்தில் வெளிபாகத்தில் ஆச்சர்யமாக சஸ்திரசிகித்சை இன்றைக்கும் பலவிடங்களில் செய்யப்பட்டு வருகின்றது. ஸம்மோஹினி, ஸஞ்ஜீவனீ, போன்ற சில திவ்விய மூலிகைகள் காலக்கிரமத்தில் உபதேசிப்பாரின்றி மறைந்துவிட்டன. நூல்களிலில்லாத பல முறைகள் பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வந்து அவைகளும் காலக்கிரமத்தில் மங்கிவிட்டன. இவ்விதம் மேல்நாட்டு முறைகளுக்குத் தாயாக விளங்கும் சுதேச முறையை நிஷ்காரணமாகத் தாக்கிக் குறை கூறிவருபவர்களும் நமது தேசத்தில் சிலர் உளர். திருச்சி ஸ்ரீமான் T. S. S. ராஜன் அவர்கள் சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் சுதேச வைத்தியத்தைத் தாக்காமலிருந்ததில்லை. சஸ்திரசிகித்சையும் X-ray போன்ற கருவிகளும் ஆங்கில வைத்தியத்தில் மிகவும் அபிவிருத்தி யடைந்திருப்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் ஔஷத முறைகளில் அவர் அந்தப்பெருமையை நிதர்சனமாகக் காட்டமுடியாதென்றே சொல்லுகிறோம். நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ளபலர் ஆங்கில வைத்தியம் செய்துகொண்டு சலிப்புற்றுக் கடைசியாகச் சுதேச வைத்தியர்களிடம் சரண் புகுவதைக் கண்

ளுள்ளவர் பாராமவிரார். 21—5—39ல் கொடைக்கானலில் ராவ்பகதூர் Dr. A. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் செய்த உபந்நியாசத்தில் தலைமை வகித்த ராவ்பகதூர் கேப்டன் K. M. அனந்தன் அவர்கள் தலைமைப் பிரசங்கத்தில் அடியிற் காணுமாறு கூறியுள்ளார்—

"Sometimes remedies found in the indigenous systems of medicine proved also efficacious" இதன் பொருள் – சுதேச நூல்களில் கூறப்பட்டுள்ள மருந்துகள் சில சமயங்களில் குண முள்ளவைகளாகக் காணப்பட்டன.

1-10-39ல் டாக்டர் திருமூர்த்தி அவர்கள் லாகூரில் செய்த ஓர்பிர சங்கத்தில் அடியில் காணுமாறு கூறியுள்ளார்.–"That the medical and surgical arts had reached a higher standard earlier in India than in other countries will be evident from a perusal of the ancient works of **Sutruta** and **Charaka**. Despite Brahminical prohibitions Susruta advocated the dissection of the dead bodies as indispensable for the training of a surgeon. Vaccination unknown to Europe before the 18th Centuary, was known in India as early as 550 A. D. The Science of Hypnotism and Hypnotic Therapy appears to have originated among the Hindus.

இதன் பொருள்—முன்காலத்தில் மற்ற நாடுகளைக்காட்டிலும் இந்தியாவில் மருத்துவ சாஸ்திரமும் சஸ்திரசிகித்சையும் மிகவும் உயர்ந்த நிலைமையில் இருந்தன. புராதன வைத்திய நூல்களாகிய சுசுருதம், சரகம். இவைகளைப் படித்தால் இவ்வுண்மை புலப்படு கின்றது. பிராமணர்களின் ஆக்ஷேபம் இருந்தும் கூட சுசுருதர் சவபரீக்ஷை ஓர் சர்ஜனுக்கு இன்றியமையாததெனக் கூறுகின்றார். 18வது நூற்றாண்டுக்கு முன் ஐரோப்பியர்கள் அறிந்துகொள்ளாத அம்மை குத்துதலை ஏறக்குறைய கி. பி. 550ம் ஆண்டுகளில் இந்தியர் அறிந்திருந்தனர். ஹிப்னாடிஸம் என்ற மனோவசிய சாஸ்திரம் ஹிந்துக்களிடமிருந்தே வெளிக்கிளம்பியதாகத் தெரிகிறது.

[library stamp]



இவ்விதம் சுதேசத்திலும் பிரதேசத்திலுமுள்ள பல மேதாவிகள் ஆயுர்வேதத்தை அங்கீகரித்திருக்கின்றனர். டாக்டர் T. S. S. ராஜன் அவர்களைப்போன்று சிலர் இகழ்ந்தாலும் வஸ்துவின் உண்மையான பெருமை குன்றாதெனவே நினைக்கின்றோம்.

---

## குறைந்த இடையுள்ளவர் அதிக காலம் ஜீவிக்க முடியுமா?

---

சரீர இடை குறைவாகயிருப்பவர்கள் அதிக நாள் ஜீவித்திருக்கின்றனரா? என ஓர் பிரச்னை நிபுணர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டது. மனிதனுடைய ஹிருதயமானது இரவும் பகலும் ஓய்வில்லாமல் வேலை செய்யும் ஓர் யந்திரமாகும். இவ்வியந்திரத்திற்கு வாழ்நாள் முழுவதும் சற்று கூட ஓய்வென்பதே கிடையாது. ஒவ்வொரு நிமிஷமும் இது ஆறு குவார்டர் அளவுள்ள ரக்தத்தைச் செலுத்துகின்றது. ஒரு நாளில் லக்ஷம் தடவை இது துடிக்கின்றது. ஒரு நாளில் நுரையீரல்களிலிருந்தும் நுரையீரல்களுக்கும் இரண்டாயிரம் கேலன் அளவுள்ள ரக்தத்தைச் செலுத்துகின்றது. மனிதசரீரத்திலுள்ள ஒவ்வொரு பவுண்டு கொழுப்பிற்கும் ஐந்து மைல் நீளமுள்ள ரக்தக்குழாய்கள் அமைந்திருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. சரீரத்தின் இடை அதிகமாக ஆக ஹிருதயத்திற்கு அதிக வேலை கொடுக்க வேண்டியதாகின்றது. சரீரத்தின் இடை குறையக்குறைய ஹிருதயத்தின் வேலை இலகுவாக ஆகி அதனால் அதிக நாள் ஜீவிக்க முடியுமா? கனத்த சரீரமுள்ளவர்களைக் காட்டிலும் இலேசான சரீரமுள்ளவர்கள் அதிக நாள் ஜீவித்திருக்கக் கூடுமா? என்ற பிரச்னை உதிக்கின்றது.

இயற்கைக்குக் குறைவான சரீர இடையுள்ளவர்கள் மற்றவர்களைக்காட்டிலும் அதிக நாள் ஜீவித்திருக்கக் கூடுமென்பது சரியல்ல. சரீர இடை குறைந்தவர்களுக்கு ஹிருதயம் மற்றவர்களுடைய ஹிருதயம் போல சரிவர வேலை செய்வ[illegible] இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்த நிபுணர்கள் அடி[illegible]ஆறு அ[illegible]யப்படு

[library stamp] 2|0187

கின்றனர். சரீரம் இயற்கைக்குக் குறைந்த இடையுள்ளதாகி விட்டால் அப்பொழுது ஹிருதயத் துடிப்பும் ரக்த ஓட்டமும் மந்தப் படுகின்றது. அப்பொழுது ஹிருதயமும் சுருங்க ஆரம்பித்து விடுகின்றது. சரியான இடையிருந்தால் சரீரத்தில் வியாதியை எதிர்த்து நிற்கும் சக்தி எவ்வளவு இருக்குமோ அது இல்லாமல் குறைந்து விடுகின்றது. சுலப வியாதிகளையும் எதிர்க்க சக்தியில்லாமல் பல விபத்துக்குள்ளாகின்றது. ஒரு சமயம் நீண்ட ஆயுள் இருந்தாலும் அது சுகவாழ்க்கையுடன் இராது.

---

## சிகித்ஸைக் குறிப்புகள்

## (பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்கள் எழுதியது)

பிராமணஜாதி உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர். சுமார் இரண்டு வருஷமாக க்ஷய நோய் வாய்ப்பட்டு பலவித ஆங்கில சிகித்சை செய்துகொண்டு கடைசியாக என்னிடம் வந்தார். அவருக்கு வயது சுமார் 40 இருக்கும். நடுத்தரமான சரீரமுள்ளவர். நல்ல காற்று வசதியுள்ள ஓர் கிராமத்தில் (மதுரை ஜில்லாவைச்சேர்ந்த) வசிப்பவர். பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவராகையால் நல்ல ஆகார வசதியுடன் இருப்பவர். மேல்நாட்டு நாகரீகத்தில் ஈடுபடாமல் வைதீகக்கொள்கையைச் சாதாரணமாகக் கைகொண்டவர். (இவ்வளவு தூரம் நாம் வர்ணிப்பதற்குக்காரணமென்னவெனில் காற்றுள்ளதாயும் ஜன நெருக்கமில்லாததுமான இடங்களில்வசித்தும் புஷ்டியான ஆகாரமும் உட்கொண்டால் க்ஷயநோய் அனேகமாக அணுகாது என ஓர் எண்ணம் ஆங்கில வைத்தியர்களின் மனதில் இருப்பதால் அவர்கள் சொல்லும் வண்ணம் சகல வசதியிருந்தும் நாம் சொல்லும் மனிதருக்கு இவ்வியாதி வந்துவிட்டது என்பதைக் காட்டவே.) இவருக்கு சுமார் இரண்டு வருஷங்களாக இந்நோய் கண்டிருந்தது. நல்ல பணக்காரர் ஆனது பற்றி மற்றவர்களைப் போலவே இவரும் ஆரம்பத்திலேயே ஓர் பிரசித்திபெற்ற ஆங்கில வைத்தியரிடம் ஆலோசனைக்குச் சென்றார். அவர் ஆலோசனையின் பேரில் [illegible] எடுக்கப்பட்டது. வாடிக்கைபோல சில மருந்து

களும் டானிக்குகளும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்விதம் இரண்டு வருஷமும் விடாமல் ஆங்கில வைத்தியரிடம் சிகித்சை பெற்ருர். பிறகு அச்சிகித்சையில் திருப்தியடையாமல் என்னிடம் ஆலோசனைக்கு வந்தார். அப்பொழுது அவர் இருந்த நிலைமை யாவது—காய்ச்சல் விடாமல் இருந்ததுடன் காலைவேளைகளில் சற்று தணிவதும் பிறகு பிற்பகலில் அதிகமாவதுமாக விருந்தது. பிற்பகலில் 102 டிக்கிரி முதல் 103 வரையில் காய்ச்சல் விசிற்று. ஓயாத வரட்டு இருமல். அரைபர்லாங்குக்கு அதிகம் நடக்கமுடியாத படி துர்பலம். இந்த தூரமும் சிரமப்பட்டே தான் நடக்கமுடியும். அதிக அன்னத்துவேஷம் இல்லை. பசியும் ஆகாரமும் சுவல்பம். கழுத்தில் முன்பாகத்தில் அதாவது தொண்டைக்கு நேராக ஓர் gland உண்டாகி அது பழுக்கும் தருணத்திலிருந்தது. அதோடு காதுகளின் பக்கத்தில் 2–3 glandகளும் இருந்தன. ஆனால் அவை பழுக்கும் நிலைமைக்கு வரவில்லை. தலை கிறுகிறுப்பு தலைச்சுற்றல் இரண்டு காதுகளிலும் சீ வந்து கொண்டிருந்தது. இந்நிலைமையில் நான் சிகித்சையை ஒப்புக்கொண்டேன். கழுத்தில் முன்பாகத்தில் பழுத்திருந்த glandஐ ஆபரேஷன் செய்யவேண்டியது அவசியமாக இருந்ததால் மதுரையில் அக்காலத்திலிருந்த D. M. O. அவர்கள் ஆபரேஷனைச் செய்தார். காதுகளுக்கு உள் பக்கத்திலுள்ள எலும்பு களிலும் T. B. பரவி அரித்து விட்டதால் காதுகளில் சீழ் வருவதாகவும் தலை கிறுகிறுப்பு முதலியவைகள் அதை யொட்டியிருப் பதாகவும் ஆகவே காதுகளில் ஆபரேஷன் செய்யவேண்டியது அவசிய மெனவும் காதுநோய் நிபுணர் அபிப்பிராயம் கொடுத்தார். காது களில் செய்யவேண்டிய ஆபரேஷனைப் பிறகு பார்த்துக்கொள்ளலா மென்று நான் சொன்ன யோசனை நோயாளிக்கும் மனதிற்குப் பிடித் திருந்தது. அவர் சுபாவத்தில் ஆபரேஷனைக் கண்டால் பயப் படுவார். ஏற்கனவே செய்துகொண்ட ஆபரேஷனுக்கே அவர் சம்மதி கொடுப்பது வெகு சிரமமாக விருந்தது. ஆகவே காது களின் ஆபரேஷனுக்கு அவரும் இணங்காததால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. தாளகபஸ்மம், வைக்ராந்தபஸ்மம், ஸ்வர்ண மாக்ஷிகச்சிந்தூரம், சுவர்ணசிந்தூரம் இவைகளை முக்கியமாகக் காலை யிலும் சாயங்காலத்திலும் தேனில் குழைத்துக் கொடுத்து வந்ததில்

30 நாட்களில் காய்ச்சல் தணிய ஆரம்பித்தது. நாகபலா லேகியம் முதலியவை சில காலம் சேர்த்தும் கொடுக்கப்பட்டன. ஆறு மாதத்தில் காய்ச்சல் பூர்ணமாக நின்றது. காதில் வந்த சீ நின்றது. தலை கிருகிருப்பு காதுமந்தம், முதலியவை நிவர்த்தியானதுடன் கழுத்திலிருந்த glands அமுங்கிவிட்டன. பூர்ண சுகம் வந்து விட்டது. சமயத்திற்குத் தக்கவாறு நடுவில் சில மருந்துகளும் சேர்த்துக் கொடுக்கப்பட்டன.

---

## சித்தர் முறை.

(பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்கள் எழுதியது)

சித்தர் முறை என்பதுசித்தர்கள்இயற்றியுள்ளமுறை. ரசம், கந்தகம், பாஷாணம் முதலியவைகளால் எல்லா நோய்களுக்கும் செய்யப்படும் சிகித்சைக்குப்பொதுவில் சித்தர் முறை யெனப்பெயர். அதாவது உலகத்தில் உண்டாகும் நோய்களை விலக்க மூலிகைகளாலும் ரஸம், கந்தகம் முதலியவைகளாலும் சிகித்ஸை செய்யலாம். மூலிகைகளால் செய்யப்படும் சிகித்சையை **மாளிடசிகித்சை** என்பர். ரஸம் கந்தகம் முதலியவைகளால் செய்யப்படும் சிகித்சைக்கு **தேவசிகித்சை** எனப்பெயர். வடமொழியில் மாளிடசிகித்சையையும் தேவசிகித்சையையும் தனித்தனியாகப் பிரித்து நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சரகம், சுசுருதம் அஷ்டாங்கஹிருதயம், அஷ்டாங்கஸங்கிரஹம், போன்ற நூல்கள் மானிடசிகித்சையை விவரிக்கின்றன. ரஸரத்னஸமுச்சயம் ரஸரத்நாகரம் ரஸேந்திர சிந்தாமணி ரஸேந்திரஸாரஸம்கிரஹம் ரஸப்பிரகாசஸுதாகரம் ரஸசூடாமணி போன்ற நூல்கள் தேவசிகித்சையை விவரிக்கின்றன. இந்த மூலகிரந்தங்களைப் பார்த்துப் பின் வந்த மேதாவிகள் இரு சிகித்சையையும் சேர்த்து ஒரே நூலாக எழுதத்தலைப்பட்டனர். சார்ங்கதரம் பாவப்பிரகாசம் யோகரத்நாகரம் பைஷஜ்யரத்நாவளி வைத்யசிந்தாமணி முதலிய நூல்கள் இரு முறைகளையும் போதிக்கின்றன. ஓர் வண்டிக்கு இரு சக்கரங்களும் தேவையாகவிருப்பது போல வைத்தியனுக்கு இரு முறைகளும் அவசியமே. இவற்றுள் ஒவ்வொரு முறையை மாத்திரம் அப்பியசித்து மற்றொரு முறையின்

சகாயமின்றியே சிகித்சை செய்து வருபவர்களும் பலர் இருக்கின்றனர். இரண்டு முறைகளும் சேர்ந்திருப்பது விசேஷமான பலனளிக்குமென்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த இரண்டு முறைகளிலும் மிகவும் தேர்ச்சி பெற்ற வாக்படாசார் தேவசிகித்சையை சற்று உயர்வாகவும் எழுதியுள்ளார். ரஸரத்னஸமுச்சயத்தில் (இதற்கு ரஸ வாக்படம் என்னும் ஓர் பெயர் உண்டு) வாக்படர் கூறுவதாவது—

स्वल्प मात्रोपयोगित्वात् अरुचेरप्रसंगतः ।
क्षिप्रमारोग्यदायित्वात् ओषधीभ्योऽधिकोरसः ॥

இதன் பொருள்-ரஸம், கந்தகம், பாஷாணம், முதலிய பஸ்மசிந்தூரங்களால் செய்யப்படும் சிகித்சைக்கு ரஸசிகித்சை யெனப்பெயர். மூலிகைகளால் செய்யப்படும் சிகித்சை யைக்காட்டிலும்ரஸ சிகித்சை மிக உயர்வானது. அதற்குக் காரணங்கள் மூன்று. முதல் காரணமாவது--ரஸசிகித்சையில் மருந்தின் அளவு மிகவும்சுவல்பமாகஇருக்கின்றது. உதாஹரணமாகக் காய்ச்சலில் ரஸசிகித்சை (இதுவே தேவசிகித்சை) செய்வதாக வைத்துக்கொள்வோம். பாஷாண பஸ்மம் அல்லது ஜ்வராங்குசம் கஸ்தூரிபைரவம் முதலிய காய்ச்சல் மருந்துகளில்எதைக்கொடுத்தாலும் ஒரு குன்றிமணி யளவு முதல் இரண்டு குன்றிமணி அளவு வரை கொடுக்கக்கூடியதாக விருக்கின்றது. இந்த அளவைத் தேனில் குழைத்துக் கொடுக்கின்றோம். இதே காய்ச்சலுக்கு மூலிகை சிகித்சை செய்தால் காய்ச்சலில் சொல்லியுள்ள எந்த கஷாயமும் அதமபக்ஷமாக ஒரு அவுன்சு முதல் இரண்டு அவுன்சு வரை ஒரு வேளைக்குக் கொடுக்க வேண்டியதாகின்றது. இச்சிகித்சையால் ரோகிக்கு ஓர் அருவருப்பு உண்டாகின்றது. முன் சொல்லிய ரஸசிகித்சையில் மருந்தின் அளவு அதிகமாகவிருப்பது பற்றிய அருவருப்பு ஏற்படுவதில்லை. ஆகவே இது இரண்டாவது காரணமாகின்றது. மூலிகை சிகித்சையைக்காட்டிலும் ரஸசிகித்சையால் நோய் சீக்கிரம் விலகி சீக்கிரம் ஆரோக்யமுண்டாகின்றது. இது மூன்றாவது காரணமாகின்றது. இம்மூன்று காரணங்களால் ரஸசிகித்சை உயர்ந்ததெனக் கூறப்படுகின்றது. இவைகளைத் தவிர நான்காவது காரணமும் ஒன்று சொல்லக்கூடும். அதாவது—பொதுவாக எந்த நோய்கருச் சிகித்சை செய்தபோதி

லும் நோயாளியின் சரீரக்கூறை கவனிக்கவேண்டியது முக்கியம். அதோடு அந்நோய் திரிதோஷங்களில் எந்த தோஷம் அல்லது தோஷங்களின் பிரகோபத்தால் வந்திருக்கின்றதென்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இதை நிச்சயம் செய்தால் தான் சிகித்சை செய்யமுடியும். ஏனெனில் வடமொழி வைத்ய நூல்களில் ஒவ்வொரு நோயிலும் திரிதோஷப் பிரகோபத்திற்கு ஏற்றவாறு மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாஹரணமாகக் காய்ச்சல் என்றால் அது திரிதோஷங்களில் எந்த தோஷத்தின் பிரகோபத்தால் ஏற்பட்டதென்பதை நிர்ணயித்தால் தான் அதற்குத் தகுந்த மருந்து கொடுக்கமுடியும். அவ்விதம் நிர்ணயிக்காவிட்டால் மருந்தே கொடுக்கமுடியாது. இவ்விதம் நிர்ணயிப்பது படித்த வைத்தியர்களுக்கே சாத்தியமாகும். சாதாரண வைத்தியர்களுக்கு நிர்ணயம் சுலபமல்ல. தேவசிகித்சையிலோ வெனில் இந்த சிரமம் கிடையாது. காய்ச்சல் என்று தெரிந்தால் போதும். அதன் வகுப்பு நன்றாக புலப்படாவிட்டாலும் சிகித்சை சுலபம். ஆகவே இதை நான்காவது காரணமாகவும் முக்கிய காரணமாகவும் கொள்ளலாம்.

சித்தர் முறை என்பது வடமொழி வைத்தியதிற்கும் தென்மொழி வைத்தியத்திற்கும் பொதுவான பெயராக இருக்கின்றது. வடமொழியில் தேவசிகித்சைக்கு சித்தர் முறை என்று பெயர் இருப்பதுபோல தமிழ் வைத்தியத்தில் அமையவில்லை. தமிழில் சித்தர்கள் மூலிகை சிகித்சையையும் ரஸசிகித்சையையும் சேர்த்தே நூல் எழுதியுள்ளார்கள். வடமொழியில் ஆயுர்வேதமென்றால் மூலிகை சிகித்சையையே அது குறிக்கும். தமிழிலோ வெனில் ஆயுர்வேதமென்றால் இரு சிகித்சையையும் தான் பொதுவாகக் குறிக்கும். தமிழில் சித்தர்கள் இரு முறைகளையும் தனித்தனி வகுக்காமல் இரு முறைகளையும் ஒன்று படுத்தியே நூல்கள் எழுதியிருப்பதால் ஒரு பெயரால் இரு முறைகளும் அழைக்கப்படுகின்றன. வடமொழியில் சித்தர் நூல்கள் பல அச்சிடப்பட்டும் பல நூல்கள் அச்சிடப்படாமலும் இருக்கின்றன. ரஸாங்குசம். பைரவதந்திரம் நந்தி ஸம்ஹிதை, ஸ்வச்சந்தபைரவம், மந்தானபைரவதந்திரம், காகதந்திரம், சண்டீசுவரர், வாசுதேவதந்திரம், ரிச்யசிருங்கர், க்ரியாதந்

திரஸமுச்சயம், ரஸேந்திரதிலகம் பானுகிதந்திரம், மர்யலதந்திரம், மகாதேவதந்திரம், நரேந்திரதந்திரம், ரத்னாகரம், ஹரீசுவரதந்திரம் இவை முதலியவை ஆதி நூல்களாக விருந்திருக்கின்றன. இவை யனைத்தையுமுணர்ந்து அவைகளிலுள்ள சாரபாகத்தைச் சுருக்கி வாக்படர் ரஸரத்னஸமுச்சயமென்ற நூலை இயற்றியுள்ளார். வடமொழியில் சித்தர்கள் 27 இருந்ததாகத் தெரிகின்றது. அவர்களாவன—ஆதிமர், சந்திரஸேனர், ராவணன், விசாரதர், கபாலி, மத்கர், மாண்டவ்யர், பாஸ்கரர், சூரஸேநர், ரத்னகோசர், சம்பு, ஸாத்விகர். நரவாஹனர், இந்திரதர், கோமுகர், கம்பலி, வியாடி, நாகார்ஜுநர், ஸுராநந்தர், நாகபோதி, யசோதநர், கண்டர், காபாலிகர், பாணன், கோவிந்தர், லம்பகர், பலி. இவர்களுள் ராவணன், பாணாசுரன், பலிச்சக்கிரவர்த்தி இந்த மூவரும் புராணப்பிரசித்தி பெற்றவர்கள் ஹிந்துக்களில் இவர்களை யறியாதார் இரார். கோவிந்தர் என்பது அத்வைதாசார்யாளான ஸ்ரீசங்கரபகவத் பாதாளுடைய குரு என்று தோன்றுகிறது. அவர்கள் ரஸஹிருதய மென்ற நூலை யியற்றியுள்ளார். இப்புத்தகம் பல பிழைகளுடன் பம்பாயில் அச்சிடப்பட்டிருக்கின்றது. சித்தர்களாவதற்கு வேண்டிய உபாயங்களை அந்நூல் போதிக்கின்றது. இந்த சித்தர்களும் இனி சொல்லப்போகும் தமிழ் சித்தர்களும் வெவ்வேறாக இருப்பது புலப்படும்.

வடமொழியிலுள்ள சித்தர் நூல்கள் ஒவ்வொன்றும் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன—

**ரஸகண்டம். பிரயோககண்டம், ரஸாயனகண்டம் வாகண்டம்**

**மந்திரகண்டம்** என்பவைகளே. கண்டம் என்ற வடமொழிக்கு பாகம் எனப்பொருள்.

1. **ரஸகண்டம்**—இப்பாகத்தில் ரஸம், கந்தகம், முதலியவைகளின் சுத்தி பஸ்மசிந்தூர முறைகள் யந்திரவிதி, புடவிதி, ரஸம் முதலியவைகளின் குணங்கள், ஆகிய இவைகள் தனியாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

2. **பிரயோககண்டம்**—இப்பாகத்தில் ஒவ்வொரு நோய்க்கும் பற்பல மருந்து முறைகள் கூறப்பட்டிருக்கின்றன.

3. **ரஸாயனகண்டம்**—இதில் பலவித காயகல்ப முறைகள் கூறப்பட்டிருக்கின்றன.

4. **வாதகண்டம்**—இதில் கீழ்த்தரமான உலோஹங்களை அதாவது தாமிரம், ஈயம் முதலியவைகளை உயர்ந்த லோஹமாக அதாவது தங்கம் வெள்ளி இவைகளாக மாற்றும் முறைகள் கூறப்படுகின்றன. இதற்கு ரஸவாதமெனவும் பெயர்.

5. **மந்திரகண்டம்**—இப்பாகத்தில் மந்திரங்களால் கிடைக்கக் கூடிய பலன்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இந்த ஐந்து கண்டங்கள் அல்லது பாகங்களை ஒன்றுபடுத்தாமல் தனித்தனி நூல்களாக வடமொழியில் அமைந்திருக்கின்றன. ஆனால் தமிழில் இவ்வைந்தும் கலந்து ஒரே புத்தகமாக இருக்கின்றது. ஆகவே தமிழ் சித்தர் நூல்கள் படிப்பவர்களுக்கு கிலேசத்தையுண்டுபண்ணுகின்றன. வடமொழியிலுள்ள சித்தர் நூல்கள் (முன் சொல்லியவற்றுள்) இவ்வைந்து கண்டங்களும் (பாகங்களும்) தனித் தனியே அமைந்திருப்பதைக் காணலாம். தத்காலம் அச்சிடப்பட்டிருக்கும் வடமொழி சித்தர் நூல்களில் வாதகண்டம், மந்திரகண்டம் நீங்கலாக மற்ற மூன்று கண்டங்களும் காணப்படுகின்றன. வைத்தியனுக்கு உபயோகமுள்ள கண்டங்கள் மூன்றே. ஆகையால் அந்த மூன்று கண்டங்களே விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மையாக இவைகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

சித்தர் என்றால் என்ன? சித்தர் என்பது வடமொழி. ஸித்தியைப் பெற்றவர் சித்தர் ஆவார். ஸித்தி என்பது ரஸ ஸித்தியைக் குறிக்கின்றது. சித்தர்களைச் சொல்லும் பொழுது ரஸவாக்படத்தில் "ஏதே சரந்தி ராஜேந்திரா ரஸஸித்தா மஹாபலா" எனக் கூறப்பட்டிருக்கின்றது. முன் சொன்ன 27 சித்தர்களும் அரசர்களாக விருந்ததாகவும் ரஸஸித்தி பெற்றவர்களென்றும் அவ் வசனம் கூறுகின்றது. ரஸத்தைப் பதினெட்டு சம்ஸ்காரங்கள் செய்து அக்னிக்கு ஜயிக்கும்படி செய்து அதைக் கல்பமுறையாகச் சாப்பிட்டு சரீரஸித்தி பெற்று வெகுகாலம் ஜீவித்திருப்பவர்கள் ஸித்தர்களெனப் பொருள் கிடைக்கின்றது. மூலிகைகளால் ஆகிய ரஸாயனங்களை உபயோகித்து காயசித்தி பெறுபவர்கள் முனிகளெனக் கருதப்படுகின்றனர். ரஸத்தால் காயசித்தி பெறுபவர்கள் சித்தர்களாவர். மூலிகைகளால் கிடைக்கும் காயசித்தியை விட ரஸப்பிரயோகத்தால் கிடைக்கும் காயசித்தி நூல்களில் மிகவும் புகழப்படுகின்றது. மூலிகைசிகித்சையும் மூலிகை ரஸாயனமும் பிரம்மாவின் இடத்திலிருந்து உலகத்திற்குப் பரவிற்று என்றும் தேவசிகித்சையும் இ[illegible]யனமும்பரமசிவனிடமிருந்து கிரமமாக உலகத்[illegible] பரவி[illegible]ம் நூல்கள் கூறுகின்றன.

# க்ஷயாந்தக ரஸம்.

ய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) ஓர் ஒப்புயர்
மருந்தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்ட தாளக பஸ்மம்
ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இம்மூன்றும்
ப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெயருடன்
காலமாக அனுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இம்மருந்து க்ஷய
ளில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது. சுமார் 15 நாட்
காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சில மாதங்
துள் பூர்ண சுகத்தை அளிக்கின்றது. 4 அல்லது 5 மாதங்
துள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்துடன்
ள பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகபலா லேகியத்தை
ானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | |
|---|---|---|
| ந்தக ரஸம் | ஒரு மாத மருந்து விலை ரூ. | 10. |
| ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை ஷை விலை ரூ. | 20. |
| நாகபலா லேகியம் | ஷை ஷை விலை ரூ. | 5. |

தபால் செலவு வேறு.

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இரண்டு வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அரிசி, கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணை, பாதாம்பருப்பு,
சாரப் பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக் கூடிய
ரிகள் முதலியன புஷ்டியாகச்சேர்த்துக் கொள்ளவும். சற்று
ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல் நின்ற பிறகு
ல ஸ்நானம் செய்யலாம்.

விலாசம்:—

பண்டி... ...யங்கார்.

2, கிர் போலீ...

We stand
Unrivalled today in the whole
Medical world to supply the highes
Standard of our Ayurvedic Tincture
Work starts on a large commercial
scale presently
Look for
Our Shastraic preparations,
Specialties & simple tinctures
Including
The unrivalled **Tincture Saptaparni**
The greatest malarial specific
More effective than quinine without
Of the latter's ill effects.
It will shortly replace quinine eve
where.
Ayurvedic Physicians
Will prescribe
Ayurvedic tinctures in future in
The same way as doctors do. (B.P. Tinctur
Ayurvedic tinctures are standard
In Indian Empire as
B. P. Tinctures are in British Empire.
Influential persons with good fina
cial backing wanted as Chief Stockist
and Distribu for Madura, Tinnevell
Trichinop and Tanjore Districts.
**Ayur d Tinctures Ltd.**
**UM.**